ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# அருளாளர் மாலை.

(7330)

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 36.

அன்பளிப்பு.

சங்கக் காரியாலயம்
ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

6-6-1952.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

| இலக்கம். வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|
| 1. ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம். | ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள். |
| † 2. தேசிகர் நூற்றந்தாதி. | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 3. மறைமுடித் தேசிகனுர். | ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள். |
| 4. மணவாள மாமுனிகள். | ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள். |
| 5. அழகர் மாலே. | நற்றமிழன்பர்கள். |
| 6. வேதாந்த தேசிக ரூசல். | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 7. தோத்திர மாலே. | ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்க நாயகி அம்மாள். |
| † 8. தொண்டர் மாலே. | ஸ்ரீபண்டித சிந்தாமணி கோபாலய்யங்கார் அவர்கள். |
| 9. கம்பர் மாலே. | ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 10. பரிமுக மாலே. | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் அவர்கள். |
| 11. ஸ்ரீ ஆண்டாள் மாலே. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலே அய்யங்கார் அவர்கள். |
| 12. ஸ்ரீ பார்த்தசாரதி மாலே. | ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள். |
| 13. திருவருண் மாலே. (33) | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 14. தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34) | ப. ரெ. திருமலே அய்யங்கார். |
| † 15. அடைவு அமைக்கும் அற்புதன். | ப. ரெ. திருமலே அய்யங்கார். |
| † 16. தமிழர் தொழு வேதாந்த வாசிரியன். | ஸ்ரீமான் டி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள். |
| 17. புகழ் மாலே. | தமிழன்பர். |
| 18. கம்பர் தருங் கண்ணன். | ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள். |
| 19. முக்கோற்பகவர். | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள். |
| 20. ஸ்ரீ வீரராகவ மாலே. | ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

7330



# அருளாளர் மாலை.

## திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு—36

இது
ஸர்வமங்கள நந்தனவாண்டு வைசாக மஹோத்ஸவத்தில்
நாலாரும் நன்னாள் வெள்ளிக்கிழமை கருடஸேவை
யன்று முத்திதரு நகரேழின் முக்கியமாங்
கச்சியம்பதிப் பேரருளாளப் பெருமாள்
திருவடிகளில் இடப்பெற்ற
காணிக்கை.

6-6-1952.

முதற் பதிப்பு—மே, 1952

ஸ்ரீ:

# உள்ளுறை.

பக்கம்.

**முன்னுரை.** ... 1.
[ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள், அட்வொகேட், சென்னை.]

**முகவுரை.** ... 3.
[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சசங்கம்.]

**தனியன்கள்.** ... 23.

**ஸ்ரீஹஸ்திகிரி மாஹாத்ம்யம்.** ... 24.
(ஸ்ரீவேதாந்த தேசிகர்)

**அடைக்கலப்பத்து.** (ஸ்ரீவேதாந்த தேசிகர்) ... 41.

**அர்த்த பஞ்சகம்.** (ஸ்ரீவேதாந்த தேசிகர்) ... 42.

**ஸ்ரீவைஷ்ணவ தினசரி.** (ஸ்ரீவேதாந்த தேசிகர்)... 44.

**திருச்சின்னமாலை.** (ஸ்ரீவேதாந்த தேசிகர்) ... 45.

**பன்னிருநாமம்.** (ஸ்ரீவேதாந்த தேசிகர்) ... 49.

**கலம்பகம்.** (தேசிகமாலை.) ... 51.

Kabeer Printing Works, Madras (1905)

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபெருந்தேவீ நாயிகாஸமேத ஸ்ரீதேவாதிராஜ பரப்ரம்மணே நம:

# முன்னுரை.

"யஸ்யப்ரஸாத கலயாபதிர: ச்ருணோதி
பங்கு: ப்ரதாவதி ஜவேநச வக்திமூக:,
அந்த: ப்ரபச்யதி ஸுதம்லபதேச வந்த்யா
தம் தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி."

அழகாலும் அருளாலும் இச்சிறியேனை அறியாக் காலந் தொடங்கி அடிமை கொண்ட தெய்வம் **பேரருளாளன்.** அப்பெருமானது அறிதல் யார்க்கும் அரிதான அரும் பெருமையை மந்த மதியான அடியேனும் ஒரு சிறிதளவு உணரும்படி செய்தவை அருளிச் செயல்களும் தேசிகனது ஸ்தோத்ரங்களும் ப்ரபந்தங்களுமே. தமிழ் மறைகள் ஓராயிரம் மட்டுமன்றி நாலாயிரமும் அருளாளன் விஷயம் என்று அறிந்து அநுபவித்த பெரியார் பலரை அடிபணியும் பாக்கியம் பெற்றமையால் அடியேன் அந்த முறையையே பின்பற்ற முயன்று வருகிறேன். கடந்த கரவாண்டு வைசாக ப்ரம்மோத்ஸவத்தில் **"வேணுகோபால வரதன்"** என்றும், அதற்குமுன் (விக்ருதி) வருட மஹோத்ஸவத்தில் **"புள்ளரையன் பாசுரங்கள்"** என்றும் இரு சிறு புத்தகங்களை வெளியிட்டு திவ்யப்ரபந்த பாசுரங்கள் பலவற்றை பேரருளாளன் பேரோதும் பெரியோர்களுக்குப் பணிவுடன் ஸமர்ப்பித்துக் கொண்டேன்.

தன் திருமாதுடனே தான் தனியரசாயுறைகின்ற அத்திகிரித் திருமாலுக்கே தனிப்படப் பொருந்தும்படி

பாடிய பெரியோரில் முக்கியமாக மூவருண்டு, திருக்கச்சி நம்பிகள், கூரத்தாழ்வான், வேதாந்த தேசிகன். நம்பிகளும் ஆழ்வானும் வட மொழியில் மட்டும் பாடியுள்ளார்கள். தேசிகன் வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழியிலும் முறையே ஸ்தோத்திரங்களும், பாசுரங்களும் இயற்றியுள்ளார். தேசிகப் பிரபந்தத்திலுள்ள அருளாளன் விஷயமான பாசுரங்களே மட்டும் ஒருங்கே திரட்டி அச்சுப் போட வேண்டுமென்ற அவா நெடுநாளாக இருந்தது. அதை அருளாளன் இன்றே பூர்த்தி செய்ய இசைந்தான். அவனருளால் இவ்வாண்டு வெளிவரும் இச்சிறு புத்தகத்தில் மெய்விரத மான்மியமாகிய (ஹஸ்திகிரி மாஹாத்ம்ய) ரஹஸ்யத்தின் பாசுரங்கள் மட்டுமல்லாமல் முழு ரஹஸ்யத்தையும் காணலாம். தேவ ராஜாஷ்டகம், வரதராஜஸ்தவம், வரதராஜ பஞ்சாசத், ஹம்ஸ ஸந்தேச, ஸங்கல்ப ஸூர் யோதயாதிகளில் வரதன் விஷயமாக ச்லோகங்கள் இவைகள் எல்லாம் அருளாளர் மாலேயின் இரண்டாவது பகுதியாக விரைவில் வெளிவர அருளாளனும் அவன் மெய்யடியார்களும் அருள் புரிவாராக!

இந்தப் புத்தகத்தை வெளியிட வேண்டியதற்கு வேண்டிய ஸகல பணிகளேயும் தாமே உத்ஸாகத்தோடு ஏற்றுக்கொண்டு வெகு விரைவில் இவ்வழகிய மாலேயைத் **தமிழ்ச் சங்க மாலே**யொன்ருகப் புனேந்து கொடுத்த எனது நண்பர் ஸ்ரீ உ. வே. ப. ரெ. திருமலே அய்யங்காரவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

**வாழி அருளாளர்.**
**வாழி அணி அத்திகிரி.**

நந்தன ஹூ
வைகாசி விசாகம்.
6-6-1952.

திண்டுக்கல் ராமஸ்வாமிதாஸன்.

ஸ்ரீ:

# முகவுரை.

என்னெஞ்சம் மேயான் என்சென்னியான் தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன் - முன்னம்சேய்
ஊழியான் ஊழி பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தியூ ரான்.

—(இயற்பா. இரண்டாந் திருவந்தாதி. 95.)

அத்தியூரான் புள்ளையூர்வான் அணி மணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான் - முத்தீ
மறையாவான் மாகடல்நஞ் சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான்.

—(இயற்பா. இரண்டாந் திருவந்தாதி. 96.)

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித் திராதே - யருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர்க் கண்ணன்று
ளிச்சித் திருப்பதியா மென்று.

—(பிள்ளைப் பெருமாளையங்கார்
நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. 74.)

தத்தத்தன தத்த தானன
தத்தத்தன தத்த தானன
தத்தத்தன தத்த தானன - தனதான

நட்டத்தவ முற்று மாதர்கள்
பற்றித்தரு முத்தியே பெற
நட்புற்றவர் சொர்க்க மாமலை மிசையேறி

நச்சிக்கைவ முக்கி யேநர
கக்கெட்டகு ழிக்கு ளாவிந
டுக்கத்தின்வி ழக்கை யாவரும் விடவேதான்

இட்டத்தது விட்டெ ழாவகை
யைப்பட்டுழல் பட்ட வீயென
யெய்த்துப்பிர மித்து நாடொறு மறிவேபோ

யெட்டட்சர நிட்டை ஞானம
தற்றுக்கதி கெட்ட பாவியென்
ரட்சைப்பட ரட்சை நீயருள் புரிவாயே

துட்டக்கள விட்ட ராவணன்
முட்டிச்சம ரிட்ட போரிடை
துக்கப்பட பத்து நீண்முடி யடியோடு

சுற்றித்துகள் பட்டு வீழவி
சித்ரத்தொடு மத்ர மாரிக
டொட்டுப்பின ரக்கர் யாரையும் முதலோடு

கட்டப்படு பத்ர காளிதன்
வட்டத்தினி நிர்த்த மாடுக
ளத்திற்பலி யிட்ட ராகவ நெடுமாலே

கற்றைக்கதிர் விட்டு வீசிய
செச்சைத்தெரு ரத்ன மேதிகழ்
கச்சித்திரு வத்தி யூர்வரு பெருமாளே.

—(குரவை இராமாநுஜதாசர் நூற்றெட்டுத்
திருப்பதித் திருப்புகழ். 74.)

சதுமறையு மறியொணு வொருவன் வந்தான்முத்தி
தரவல்ல தலைவன் வந்தான்
சகலாண்ட நாதன்வந் தானடியர் செய்தபிழை
சற்றுமித யத்தி லெண்ணு

முதல்வன்வந் தானித்ய விபவன்வந்தா னென்றுன்
முன்னூது விருது சின்னம்
முச்சகமு மெச்சுமிதை மற்றுமுள தெய்வங்கண்
முன்னூதில் வெட்கு வார்காண்

மதுரகவி பணிமாறன் வண்பொய்கை பேய்பூதன்
மழிசைமன் குலேச கரன்
மங்கைநா தன்கோதை புதுவைவரு முனிபாணன்
மண்டலங்கு டிக்க திபனும்

ததியர் துதி செயவோது கவிமாலை புனையெங்கள்
சாமியே கச்சி யோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோ டிரவி தேசனே.

—(பொற்களந்தைப்பதி முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் வரதராசப்பெருமாள் பஞ்சரத்தினம். 3.)

திருவுக்குந்திருவாகிய செல்வநாரணன் அர்ச்சாவதாரங்கொண்டு எழுந்தருளியுள்ள திவ்யதேசங்கள் நூற்றெட்டு. அவற்றிலே கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்ற மூன்றும் மிகப் பழமையும் பெருமையும் பெற்றவை. இவை, சோழ, தொண்டைமண்டலங்களில் அமைந்து சந்தமிகு செந்தமிழ் நாட்டை அலங்கரித்து விளங்குவனவாகும். இச்சிறப்புப்பற்றியே, எம்பெருமானின் அபிநவதசாவதாரமெனக் கொண்டாடப் பெற்று வரும் ஆழ்வார்கள் பெரும்பாலராலும் ஸ்ரீ ஆண்டாளாலும் இவை பரமப்பிரேமையுடன் மங்களாசாஸநஞ் செய்யப் பெற்றன. திருமாலால் மயர்வறமதிநலமருளப்பெற்ற அப் பெரியார்களால் மட்டுமன்றி 'சங்கமுகத்தமிழ்மாலை', 'சங்கத்தமிழ்மாலை' என்று அவர்களால் சிறப்பிக்கப் பெற்ற சங்கத்துச் சான்றோர்களாலும் விசேஷமாகப் புகழப்பெற்ற திருப்பதிகள் இவை.

கஇதிப்ரஹ்மணோநாம தேநதத்ராஞ்சி தோஹரி :,
தஸ்மாத் காஞ்சீ தி விக்யாதாபுரீபுண்யவிவர்திநீ.

நாரணன் நான்முகனுக்கு இடந்தான்
தடம்சூழ்ந்து அழகாய கச்சி.

—(பெரிய திருமொழி. 2-9-1.)

தாமரைக் கண்ணனிடம்
தடமாமதிள்சூழ்ந்து அழகாயகச்சி.
—(பெரிய திருமொழி. 2-9-2.)

வரந்தரு மாமணி வண்ணனிடம்
மணிமாடங்கள் சூழ்ந்து அழகாயகச்சி.
—(பெரிய திருமொழி. 2-9-3.)

கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ்கச்சி.
—(திருநெடுந்தாண்டகம். 15.)

காமரு பூங்கச்சி.
—(திருநெடுந்தாண்டகம். 13.)

முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சி.
—(தேசிகமாலை. அடைக்கலப் பத்து. 1)

காசிமுத லாகியநன் னகரி யெல்லாங்
கார்மேனி யருளாளர் கச்சிக் கொவ்வா.
—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 27.)

இத்யாதிகளிலே சொல்லுகிறபடியே பிரஸித்தவைப வத்தையுடையது **ஸ்ரீ காஞ்சீநகரம்** என்கிற **பெருமாள் கோயில்.**

தேனோங்கு சோலைத் திருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றும் - தானோங்கு
தென்னரங்க மென்றும் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

என்பது **பாரதம் பாடிய பெருந்தேவனார்** பாட்டு.

பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்டாங்கு
வண்மையாற் சான்ற வருங்காஞ்சி வண்பதியும்
உண்மையா லுண்டிவ் வுலகு.
—(பெருந்தொகை. பொருளியல். 2127.)

மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும் - மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.

—(பெருந்தொகை. பொருளியல். 2128.)

பெருஞ்சித்திரனுர்வாக்கு - ஆரிடப்போலி.

ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவாச் - சீரிய
அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு.

—(பெருந்தொகை. பொருளியல். 2129.)

வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கச்சியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்ருன் கச்சி யகம்.

—(பெருந்தொகை. பொருளியல். 2130.)

புரவுதரு குடியாகிப் புயல்வண்ணன்
விரும்பியதூஉம் பொழில்சூழ் காஞ்சி
கரியசுடர் வீதிதொறு முலாப்போந்து
கவர்வதூஉங் கலைசூழ் காஞ்சி
நிரைவளையில் வுலகுய்ய நின்றுதவஞ்
செய்வதூஉ நிழல்சூழ் காஞ்சி
சுரமகளிர் பாடுவதூஉம் பயில்வதூஉம்
சொன்மாலை தொடுத்த காஞ்சி.

—(பெருந்தொகை. பொருளியல். 2131.)

(அடிநிரனிறை)

முலைகலிங்க மூரி நிலமா மகட்கு
மலைபரவை மாரிமென் கூந்தல் - குலநதி
தண்ணாரங் காஞ்சி தகைசான் முகமவட்குக்
கண்ணவா னேறுயர்த்த கோ.

—(பெருந்தொகை. பொருளியல். 2132.)

என்ற பழந் தமிழ்ப் பாடல்கள் கச்சிமாநகரின் சிறப்பை வருணித்துள்ளமை காண்க.

பத்துப்பாட்டுள் ஒன்ருகிய **பெரும்பாணாற்றுப் படையில்**

371 * * * * நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்.

[நீண்ட பூங் கொத்துக்களையுடைய காந்தளையுடைய அழகிய பக்கமலையிலே யானை கிடந்தாற் போல பாம்பணை யாகிய படுக்கையிலே துயில் கொண்டோனுடைய **திரு வெஃகா**விடத்து.]

390 * * * * யவ்வயி
னருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்.

[அத்திரு வெஃகாவணையில் அரிய திறலினையுடைய திருமாலை வாழ்த்தி நும்முடைய கரிய தண்டினையுடைய இனிய யாழைச் சிறிது வாசித்து அவ்விடத்து நின்றும் போமின்.]

என்றுள்ள அடிகள் நோக்கற் பாலன.

அத்திகிரியெம்பெருமானுக்கு வந்த திருநாமங்கள் ‘அருளாளப் பெருமாள்,’ ‘அருளாழியம்மான்’, ‘பேரருளாளர்’ என்பன. இவற்றை

துணிவு இனி உனக்குச் சொல்லுவன் மனமே!
தொழுதெழு தொண்டர்கள் தமக்கு
பிணியொழித்து அமரர் பெருவிசும்பருளும்
பேரருளாளன் எம் பெருமான்
—(பெரியதிருமொழி 1-4-4)

பேரணிந்து உலகத்தவர் தொழு தேத்தும்
பேரரு ளாளன்எம் பிரானை.
—(பெரியதிருமொழி 4-3-1)

பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும்
பேரருளாளர் கொல்? யான் அறியேன்
—(பெரியதிருமொழி 9-2-7)

செற்றவன் தென்னிலங்கை மலங்கத்
தேவர்பிரான், திருமாமகளைப்
பெற்றும் என்னெஞ்சம் கோயில் கொண்ட
பேரருளாளன், பெருமைபேசக்
கற்றவன் காமருசீர்க்கலியன்.
—(பெரியதிருமொழி 9-5-10)

அருளாதநீர் அருளி அவராவிதுவராமுன்
அருளாழிப்புள்கடவீர் அவர்வீதி ஒருநாளென்று
அருளாழியம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி
யருள் ஆழிவரிவண்டே! யாமும் என்பிழைத்தோமே?
—(திருவாய்மொழி 1-4-6)

என்ற பாசுரங்களில் ஆழ்வார்கள் விருதுகளைக்கூறி முழங்குகின்றதாற் காணலாம்.

இவற்றுள் பெரிய திருமொழி நான்காம் பத்து மூன்றுந் திருமொழி இறுதிப் பாசுரத்தின் முதல் இரண்டடிகள்

தேனமர் சோலை நாங்கை நன்னடுவுள்
செம்பொன் செய் கோயிலினுள்ளே
வானவர் கோனைக் கண்டமை சொல்லும்
மங்கையார் வாட்கலி கன்றி.

என்பன. இவ்வடிகட்கு

"(தேனித்யாதி) வண்டுகள் நெருங்கியிருந்துள்ள சோலேயையுடைத்தான திருநாங்கூரிலே செம்பொன் செய் கோயிலினுள்ளே அயர்வருமமரர்களதிபதியைக் கண்டமை யாய்த்து சொல்லிற்று" என்பது பரமகாருணிகரான **பெரியவாச்சான் பிள்ளே** வ்யாக்யானம்.

இங்குள்ள "**அப்பு அரும்பதம்**" பின்வருமாறு :—

"(தேனமரித்யாதி) முதற்பாட்டில் "பேரருளாளனெம் பிரானே" என்று உபக்ரமித்து நிகமத்தில் "வானவர் கோனே" என்று உபஸம்ஹரிக்கையாலே, தேவராஜாபிதா நமுடைய தேவப் பெருமாளேத் தாம் செம்பொன் செய் கோயிலில் கண்டாராக வருளிச் செய்தாரென்று திருவுள்ளம் பற்றி யருளிச் செய்கிருர் (அயர்வறுமித்யாதி). போக மண்டபத்தை "நலமுடையவன்" என்றும், அருள் கொடுக்கும்படிக் கேழில்லாப் பெருமானே "அருளினன்" என்றும், கோயில் திருமலேகளிலெம்பெருமானே யநுஸந் தித்த வநந்தரம், பெருமாள் கோயில் தேவராஜனே "அயர் வறுமமரர்களதிபதி" என்றருளிச் செய்தாரிறே என்று திருவுள்ளம். இங்ஙனன்ருகில், "கண்டமை யாய்த்து சொல்லிற்று" என்ன வொண்ணுது, பரமபத நாதனேச் சொல்லிற்றென்ருல், கண்ணுலே காணவும் கூடாது, "தொழுது" என்னவும் கூடாதிறே தேசவிப்ரகர்ஷத்தால்; ஆகையால் இங்ஙனே நிர்வஹிக்கவடுக்கும்."

இவ்வரும்பதத்தில் காட்டப்பெற்றுள்ள **நம்மாழ்வார்** பாசுரம்

உயர்வறவுயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதியவனவன்
துயரறுசுடரடி தொழுதெழு என்மனனே.

—(திருவாய்மொழி 1-1-1)

என்பது.

" திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹம் முதல் திருவாய் மொழி ; முதல் திருவாய் மொழியினுடைய ஸங்க்ரஹம்-முதல் மூன்று பாட்டு ; முதல் மூன்று பாட்டினுடைய ஸங்க்ரஹம்-முதற் பாட்டு "

—(ஈடு. மஹாப்ரவேசம்மூன்றும் சரிய: பதி.)

என்ற பங்க்தியையும்,

பரத்வாத்யைரித்யம் பரிசரணஸக்தோ குணகணை:,
ப்ரபும் ஸேவாயோக்யம் ப்ரதமசதகே வீக்ஷ்யவரதம்.

—(த்ரமிடோபநிஷத்ஸாரம் 5)

என்ற **தூப்புற் குலமணி**யின் சிங்கநாதத்தையும் நன்கு நோக்குக. இச்சுலோகத்தில் '**ப்ரதமசதகே வீக்ஷ்ய வரதம்**' என்கையாலே ஸ்ரீ ஹஸ்தி சைலசிகரோஜ்வல பாரிஜாதமான **பேரருளாளப்** பெருமாளுடைய அநுபவம் ஆழ்வார் முதற் பத்திலே நிகழ்ந்ததாய் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் திருவுள்ளம் பற்றுவதாக முழுதுணர் நீர்மையினேராய பெரியோர் பணிக்கும்படி.

பொன்னை மாமணியை அணியார்ந்ததோர்
மின்னை வேங்கடத்துச்சியில் கண்டு போய்
என்னை யாளுடை ஈசனை எம்பிரான்
தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே.

—(பெரியதிருமொழி 10-1-2)

என்ற **கலியன்** பாசுரப்படி 'அன்றிவ் வுலகினையாக்கி யரும் பொருணூல் விரித்து நின்ற தன்னீள் புகழ் வேங்கடமாமலை மேவிப்பினும் வென்றிப் புகழ்த்திரு வேங்கடநாதனென்னுங் குருவாய் நிற்கும்' நம் **வேதாந்த** குரு அறுதியிட்டுப் போந்த பின்னும் ஐயம் உளதேல் அது யாருடையதவரே அறிகிலோம்.

" ஆளவந்தாரும் நம்பெருமாளிடத்தில் விண்ணப்பஞ் செய்து இளையாழ்வாரைக் கடாக்ஷித்தருளுகைக்காக முதலி

களோடே திருக்கோவலூர் வழியாகப் பெருமாள் கோயி லேற எழுந்தருளி, எதிர் கொண்டு வந்த திருக்கச்சி நம்பி யையும் ஸந்தோஷித்து, பேரருளாளன் எதிரே அனுப்பி வைத்த ஸ்ரீ சடகோபனையும் தண்டன் ஸமர்ப்பித்துச் சிரஸா வஹித்துத் தீர்த்த ப்ரஸாதம் ஸ்வீகரித்தருளி, கோயிலேற வெழுந்தருளி அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷித ரான பேரருளாளரையும் பெருந்தேவியாரையும் திருவடி தொழுது, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, கரிய மாணிக்கத் தாழ்வாரை ஸேவித்து, சக்ரவர்த்தித் திருமகனையும் திருவடி தொழுது, வழிதிகைத்து, உள் நடுங்கி, 'ஆவாரார் துணை' என்று ரக்ஷகனைத் தேடின இளையாழ்வாருக்கு "தாஸா மாவிரபூச்சௌரி:" என்கிறபடியே கண்காணத் தோன்றி "பயம்த்யஜத பத்ரம்வ:" என்னுமாப்போலே ஸர்வபய நிவ்ருத்திபுரஸ்ஸரமாக ஸர்வ பல ப்ரதனை தேவரீரே வாழ்வித்தருளினபடியாலே இளையாழ்வாரென்கிற திரு நாமம் யதார்த்தமாயிற்று. இனிமேலும் "ஸக்ருதேவ" என்கிற ச்லோகத்தின்படியே ரக்ஷித்தருளவேணும் என்று ப்ரார்த்தித்து நிற்க, அப்போது யாதவப்ரகாசனும் வித் யார்த்திகளோடே பெருமாளை ஸேவித்து ப்ரதக்ஷிணம் பண்ண, ஆளவந்தாரும் 'இளையாழ்வார் ஆர்' என்று கேட்க அங்குள்ளாரும் அவரென்று ஒருவரை நிர்தேசித் துக் காட்ட, **ஆளவந்தாரும்** தன் தாமரைக் கண்களால் குளிர நோக்கி யருளி

"யஸ்ய ப்ரஸாத கலயாபதிரச் ச்ருணோதி
பங்கு: ப்ரதாவதி ஜவேநசவக்தி மூக:,
அந்த: ப்ரபச்யதி ஸுதம்லபதேச வந்த்யா
தந்தேவமேவ வரதம் சரணங் கதோஸ்மி."

என்று **பேரருளாளன்** திருவடிகளிலே "இளையாழ்வார் இந்த ஸித்தாந்த நிர்வாஹகராகவேணும்" என்று ப்ரபத்தி பண்ணி, இளையாழ்வாரைக்கண்டு நாம் வார்த்தை சொன்

ஞல் பூர்வபக்ஷம் வாசிக்கிறதற்கு விரோதமாம் என்று திருவுள்ளம் பற்றி மீண்டும் முதலிகளுந் தாமுமாகக் கோயி லேறவெழுந்தருளினர்.'' (**ஸ்ரீமத்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச் செய்த மூவ்வாயிரப்படி குரு பரம்பரா ப்ரபாவம். எம்பெருமானர் வைபவம். பக்கங்கள் 55-56. ப்ரமாதீச சித்திரை. 1913**)

கலியனது **மனங்கவர்ந்த ஈசன்** வானவர்தம் முன் னவனுகிய தேவபிரான் பேரருளாளனேதான். இதனை "**என்னை மனங்கவர்ந்த ஈசன்**" என்ற எழிற் **கட்டுரை** (**ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா**-ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை– ஸம்புடம் 9, ஸஞ்சிகை 8, பக்கங்கள் 234-236. விக்ருதி ஆவணி. 1950 ஆகஸ்டு. **ஸ்ரீ. உ. ப. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வொகேட், சென்னை,** வரைந்தது.) தெளிவாகக் காட்டுதலான் அது அங்குள்ளவாறே இங்கு தரப் பெறுகின்றது.

"திருமங்கைமன்னன் அத்திகிரிப் பெருமாளுகிய பேரருளாளனைக் குறித்துப் பாடிய திருமொழி இது. பெரிய திருமடலில் ஒவ்வொரு திவ்ய தேசத்தையும் அதில் பொலிந்து நிற்கும் பிரானையும் சேர்த்து வெகு அழகாக வரிசையிட்டு அநுபவித்து வருமிடத்தில் பின்வரும் வாக் யங்கள் பொலிகின்றன :—

> "மன்னு மதிட்கச்சி வேளுக்கை யாளரியை,
> மன்னிய பாடகத்தெம் மைந்தனை, வெஃகாவில்
> உன்னிய யோகத் துறக்கத்தை, ஊரகத்துள்
> அன்னவனை, அட்ட புயகரத்தெம் மானேற்றை,
> என்னை மனங்கவர்ந்த ஈசனை வானவர்தம்
> முன்னவனை,"........

திருக்கச்சித் திருப்பதியில் திகழும் எம்பெருமான்களை வரிசையிடுகிருர் இங்கு. இதில், திருவேளுக்கை, திருப் பாடகம், திருவெஃகா, திருஊரகம், திருஅட்டபுயகரம், திரு

வத்தியூர் என்று முறையே ஆறுதிவ்ய தேசங்கள் மங்களா சாஸநம் செய்யப் பெறுகின்றன. இவ்விடத்தில், திரு அத்தியூர் எம்பெருமானை 'என்னை மனங்கவர்ந்த ஈசன்', 'வானவர்தம் முன்னவன்' என்று இரண்டு வாக்யங்களால் நிர்த்தேசித் தருளுகிறார் கலைப்பெருமான். 'வானவர் தம் முன்னவன்' என்பது தேவாதிராஜன் அல்லது தேவர் பெரு மாள் என்பதைக் குறிக்கிறபடியால், இது விஷயத்தில் எவரும் ஸந்தேஹிக்க இடமில்லை. கச்சித்திருப்பதிகள் ஒன்றுசேர அநுஸந்திக்கப் பெறுமிடம் என்ற காரணத் தாலும், பெருமாளுடைய அஸாதாரணமான திருநாமம் பேசப்பட்டிருக்கிற தென்ற காரணத்தாலும், 'என்னை மனங்கவர்ந்த ஈசன்' என்று ஆழ்வார் பேசுவது பேரருளா ளனையே. ஆழ்வார் உள்ளத்தின் சுவடறிந்த பெரியோர் கள், 'என்னை மனங்கவர்ந்த ஈசனை வானவர்தம் முன்ன வனை' என்று ஒரே சந்தையாகத்தான் அநுஸந்திப்பது வழக்கம். [சில பதிப்புக்களில் 'ஈசனை' என்ற சொல்லுக் குப் பிறகு ஒரு அரை மாத்திரைப்புள்ளி ( , ) ஒரு கோடு (—) இவைகள் இரண்டும் சேர்ந்தோ ஒவ்வொன்ரோ குறுக் கிட்டு, அதற்குப் பின்னரே 'வானவர்தம் முன்னவனை' என்ற வாக்யம் அச்சிடப்பட்டிருக்கிறது. அப்படிப் பதிப் பிட்டவர்கள் மறுபதிப்பில் விமர்சித்துச் சரிவர அச்சிடு வதே யுக்தம்.]

ஆழ்வார் அநுபவத்தை உற்று நோக்கினல், இங்கே விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் விஷயத்தின் உண்மை விளங்கும். திருவிண்ணகர் தொடக்கமாகத் திருநறை யூரளவும் சுமார் 40 திவ்ய தேசங்கள் ஆழ்வார் அநுபவத் திற்கு வந்துள்ளன. அவற்றுள் சில திவ்ய தேசங்களில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்கள், ஆழ்வாருள் ளத்தை அதிமாத்திரம் ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்பது அங்கங்கே அமைந்த சொற்களால் விளங்குகிறது. பல

எம்பெருமான்களைப் பேசிக்கொண்டே போகுமிடத்தில், சிலர் விஷயத்தில் மட்டும் பக்ஷபாதத்துடன் தமது பெருமாள் என்று பேசிக்கொண்டு போகிறார் ஆழ்வார்.

1. மாமலர்மேல் அன்னம் துயிலும் அணிநீர் வயலாலி என்னுடைய இன்னமுதை.
2. மரதகத்தைப் புட்குழியெம் போரேற்றை.
3. மன்னு மரங்கத்தெம் மாமணியை.
4. என் மனத்து மாலை இடவெந்தை ஈசனை.
5. கோவலூர் மன்னு மிடைகழியெம் மாயவனை.
6. தென் தில்லைச் சித்திரகூடத் தென் செல்வனை.
7. மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை.
8. மன்னிய பாடகத்தெம் மைந்தனை.
9. அட்ட புயகரத் தெம் மானேற்றை.
10. என்னை மனங் கவர்ந்த ஈசனை வானவர் தம்முன்னவனை.
11. நான் வணங்கும் கண்ணனைக் கண்ணபுரத்தானை.

இப்பதினொருவர்களுக்குள்ளும் தமக்கும் தம்மைச் சேர்ந்தோர்க்கும் பொதுவாயுள்ளவர் அறுவரெனவும், ஒரைவர் தமக்கே உரிய பெருமாளென்றும் இங்கே பேசுவதைக் கவனிக்க வேண்டும். வயலாலி மணவாளன் அவரது இன்னமுதாம். இடவெந்தை எந்தை பெருமான் அவரது மனத்து மாலாம். சித்திர கூடத்தான் அவர் செல்வனும். தேவாதிராஜன் அவரை மனங்கவர்ந்த ஈசனும். கண்ணபுரத்தெம் பெருமான் அவர் வணங்கும் கண்ணனும். என்னே ! இவ்வாழ்வாரது அநுபவரஸிக்யம்! இவரது பெரியதிரு மொழியில் இவ்வைந்து எம்பெருமான்கள் விஷயத்திலும் இவருக்குள்ள விசேஷ ஈடுபாட்டை இங்கே பெரிய திருமடலில் ஸங்க்ரஹித்த தொருபடியோ என்று தோன்றும்படியிருக்கிறது அநுபவ ப்ரக்ரியை. வயலாலி மணவாளன் தான் இவரது சொந்தப் பெருமாள். ‘ தூவிரிய ’ பதிகத்துக்கு விஷயமான பெருமான் பெருமை

பேசவும் ஒண்ணுமோ ?' மேலும் தாய்மனம் நின்றிரங்க இவரைத்தனியே கொண்டுபோய் அனுபவித்த பெருமாளு மல்லவோ அவர்? திருவிடவெந்தை யெம்பெருமான் இவரது 'கங்குலும் பகலும்' பாசுரம் பெற்றமையால் பேர்பெற்ற பெருமாள். அவர் விஷயத்தில் ஆழ்வார்க்கு ஏற்பட்ட ஆர்வம் யாரே அறியார் ? சித்திரகூடத்துப் பெருமாளோ, இவ்வாழ்வாரை ஊன்வாட உண்ணுதுயிர் காவலிடாதபடி காத்துக்களிப் பித்தபெருமாள். திருக் கண்ணபுரம் சௌரிப் பெருமாளே இவர் தொழுதமை இவரையே ஒருபடி மயக்கியதென்பது 'தெள்ளியீர்' திருமொழியால் திண் ணென விளங்கும். 'கள்ளவிழ்சோலைக் கணபுரம் தொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே' என்றிறே அத்திருமொழியை நிகமிக்கிருர் ! அந்தப் பெருமாளே 'நான் வணங்கும் கண்ணன்' என்று பேச அவருக்கன்றி யாருக்கு உரிமையுண்டு ?

அவ்வண்ணமே வானவர்தம் முன்னவனுகிய தேவப் பெருமாள் இவரை மனங்கவர்ந்த படியும் பெரிய திருமொழி யிலே (காணமனமுடைய) அனைவரும் காணக்கிடக்கிறது. வடக்கு எல்லையான வதரி யாச்சிரமம் முதல் தெற்கெல்லை யான திருக்குறுங்குடி வரை பல திவ்யதேசங்களைப்பாடி யுள்ள இப்பரகாலன் உள்ளத்தை அருளாளன் அள்ளிக் கொண்டு நிற்கிருன் என்பது பெரிய திருமொழி முழுதை யும் பயின்ற பேர்களுக்கு நன்கு விளங்கும். உபக்ரம ப்ரதேசமாகிய வதரியோடு உபஸம்ஹாரப்ரதேசமாகிய குறுங்குடியோடு வாசியற அருளாளனையே பாடுகிருர் - பேசுகிருர் - பணிகிருர். 'தொண்டர்கள் தமக்குப் பிணி யொழித்தமரர் பெருவிசும் பருளும் பேரருளாளன்' கங்கை யின் கரைமேலுள்ள வதரி யாச்சிரமத்தில் முதன் முதலாகப் பேசப்பட்டு, அப்பேரருளாளன் பெருமையையே பேசிக் குறுமணி நீர் கொழிக்கும் குறுங்குடி வரை ஆழ்வார்

உள்ளத்தைவிட்டு அகலாதிருக்கிருன் என்று நன்கு தெரிவிக்கப்படுகிறது. நடுவில் பல இடங்களில் பேரணிந்துலகத்தவர் தொழுதேத்தும் பேரருளாளனுகியும், பிணியவிழ்தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளனுகியும், ஆழ்வார் அநுபவத்திற்கு விஷயமாகி நிற்கிருன் என்பதையும் பாசுரங்கள் காட்டுகின்றன. நிகமநமோ, 'தேவபிரான் திருமாமகளைப் பெற்றும் என்னெஞ்சம் கோயில் கொண்ட பேரருளாளன் பெருமை பேசக்கற்றவன்' என்று தம்மையே ஆழ்வார் வ்யவஹரித்துக் கொள்ளுமளவில், அருளாளன் ஆழ்வார் மனம் கவர்ந்து நின்ருன் என்று காட்டிக் கொடுக்கிறது. இப்படி உபக்ரமம், உபஸம்ஹாரம், அப்யாஸம் முதலிய லிங்கங்கள் (அடையாளங்கள்) இருப்பன கொண்டு 'என்னை மனங் கவர்ந்த ஈசன்' என்று ஆழ்வார் பேசுவது பேரருளாளனையே யென்று முடிவுகட்ட வேண்டி வருகிறது. தமது நெஞ்சு தம்மையு மறியாது பணிவது அருளாளன் விஷயத்தில் தான் என்பதை, 'பிணிய விழ்தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளர் கொல் யானறியேன், பணியுமென்னெஞ்சம் இதென்கொல்தோழி!' என்ற விடத்து நமக்கு உணர்த்தப் பட்டிருக்கிறது. தாம் அறியாமலிருக்கச் செய்தேயும் தம் நெஞ்சு ஒருவனிடத்துப் பணிகிறதென்ருல், அவன் அருளாளனுகத்தானிருக்க வேண்டுமென்று ந்யாயமுறையில் ஹேது பூர்வகமாக ஆழ்வாரே காட்டியருளுகிரு ரென்ருல் இனி இவ்விஷயத்தில் வேறு ப்ரமாணங்கள் தேவையா?

ஆக இவற்ருல், கலியனது மனங்கவர்ந்த ஈசன் வானவர்தம் முன்னவனுகிய தேவபிரான் பேரருளாளனே தான் என்று சொல்லப்பட்டதாயிற்று. அவ்வாழ்வார் அநுபவத்துக்கு விஷயமான வடிவழகும் அருள்பெருக்கும் இன்றளவும் அன்பரிட்டங்கள் அநுபவத்திற்கும் விஷயமாய் நிற்கின்றன வன்ருே?''

ஆடவர்க ளெவ்வா றகல்வரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றுர் மதிற்கச்சி மாண்பு.

—(பெருந்தொகை. கடவுள் வாழ்த்தியல். 29.)

அன்றவனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்தி கிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கணிற மேவுவது மத்தி கிரியே
வென்றவன் வணக்குவது மேலில கெயிற்றரிய தான வரையே
தன்ஞெழின் முருக்குவது தானில கெயிற்றரிய தான வரையே.

—(பெருந்தொகை. கடவுள் வாழ்த்தியல். 30.)

ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்காலமெல்லாம் மனமே!
ஈண்டு பல்யோனிகள் தோறுழல்வோம் இன்றோரெண்ணின்றியே
காண்தகுதோளண்ணல் தென்னத்தி யூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன் இராமாநுசனைப் பொருந்தினமே.

—(இராமாநுச நூற்றந்தாதி 31)

என்ற ஆன்றோர் பாடல்கள் கச்சித்திருமாலையும், அத்தி கிரியையும் சிறப்பித்திருத்தல் கண்டு மகிழ்க.

உலகெலாந் தொழுதேத்தும் "பேரருளாளன் பெருமையை பாவுகரான பவகந்நிஷ்டருடைய ஹ்ருதயரஞ்ஜநார்த்தமாக மநஸ்ஸிலே **பாவமும்**, வாக்கிலே ராகமும், கரத்திலே தாளமுமாக **பாவ** ராக தாளங்களை வகுத்த பரத சாஸ்த்ரத்தின்படியே பண்ணும் இசையும் திகழப் பார்க்கின்றோம்" என்ற தோற்றுவாயுள்ள ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யமான "**ஸ்ரீஹஸ்தி கிரி மாகாத்ம்யம்**" (மெய்விரத நன்னிலத்து மேன்மை), தேசிகப்பிரபந்தத்தில் பேரருளாளர் விஷயமாகவுள்ள அடைக்கலப்பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீ வைஷ்ணவ தின

சரி, திருச்சின்னமாலை, பன்னிருநாமம், கலம்பகம் (அமிருதரஞ்சனி, அதிகார ஸங்கிரகம், அமிருதா சுவாதினி, ஆஹார நியமம் இவற்றினின்றெடுத்துத் தொகுத்தது) என்றிவற்றை "**அருளாளர் மாலை**" என்ற திருநாமத்தோடு இச்சங்க வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்களிற் றலைசிறந்தவரும், அருளாளர் அடியிணைகளையே அநவரதமும் தொழுதெழுபவரும் ஆகிய **சென்னை அட்வொகேட் ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்** வேண்டுகோட்கிணங்கி இத்தனி மாலை தயாரிக்கப்பெற்று வெளியிடப் பெறுகிறது. இவர் இயற்றிய "**தேசிக வரதன்**" (பேரருளாளனிடத்தில் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் ஈடுபாடு) எனும் நூலுக்கு உலகவாம் பேரறிவாளன் திருவாகிய அந்தணச் செல்வர் **தேசிகதர்சநரத் நதீபம் வண்பாக்கம் வேங்கடம் ஸ்ரீநிவாஸ வள்ளல்** வரைந்துள்ள "**முன்னுரை**" பின்வருமாறு :—

"இந்தச் சிறிய பிரபந்தம் பெரியதோர் விருந்தேயாம். அவ்விருந்துக்கு யஜமானன் தேவாதிராஜன். நடந்து கொண்டிருக்கிறது அர்ச்சாவதார மஹாயக்ஞம், ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில். கவிதார்க்கிக ஸிம்ஹம் ஒன்று தர்ம கர்மாதிகாரி. பண்டகசாலையில் அளவிலாது குவிக்கப்பட்டிருக்கின்றன, பரத்வஸௌலப்ய பராகாஷ்டையான பகவத் குணங்கள். தர்மகர்மாதிகாரியோ வெனில் ஸர்வதந்த்ர ஸ்வதந்திரர், மிகுந்த செல்வாக்குள்ளவர். அவரால் சமைக்கப்பட்டுள்ளன எண்ணிறந்த பக்ஷ்ய போஜ்யங்களான பதார்த்தங்கள், நவரஸ பரிதமானவை. ஆயினும் இதுவரை ஸமாராதனம் நடைபெறவில்லை. சில மஹான்கள் மாத்திரமே தனித்தனி புஜித்திருக்கக்கூடும். கூவியழைத்து விருந்திட்டவர் ஒருவருமில்லை. இப்பொழுது

எமது நண்பர் ராமஸ்வாமி ஐயங்கார் தான் கண்ணும் கண்ணீருமாய்க் கொள்ளை கொண்ட ரஸாஸ்வாதத்தை அனைவருடனும் அனுபவிக்கக் கருதி பரிவுடன் பரிமாறி விருந்தளிக்கிறார். பசிருசியுடையவர் யாவரும் அவரவர்கள் வேண்டியவளவு உட்கொண்டு ஆநந்த பரவசர்கள் ஆவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்விசித்ர லோகச்ருஷ்டியில் ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொருவருக்கும், அவரவர் ரீதியை அநுஸரித்து வெவ் வேறுய்த் தோன்றுகின்ற தென்றல், பேரருளாளன் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுக்குத் தோன்றியவாறு மற்று யாருக்குத்தான் தோன்றக்கூடும்? அதைத்தாம் அனுப வித்தவாறு நமக்கு அளிக்கிறார் இந்த வரத தேசிகரஸிக சிகாமணியான இந்நூலாசிரியர். இது பழையது விருந் தென்று சங்கியேல், இதுகாறும் மூடப்பட்டிருந்தாலும், இப்பொழுது பதமான பாத்திரங்களையே கொண்டு பரி மாறப்பட்டிருப்பதாலும், ஸுகோஷ்ணமாயும், ஸ்வாதுதம மாயும், ரஸபூயிஷ்டமாயுமே இருப்பதால் இதைப் படிக்கும் விருந்தினர் யாவரும் அமுது செய்து ஆனந்தானுபவ பரிதராவார்கள். (வ. வே. ஸ்ரீநிவாஸன். வாணி விலாஸ், ஆங்கீரஸ ௵ சித்திரை ௴ 25௳.)''

''கட்டெழிற் சோலைக் கரிகிரி மேல் நின்ற கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுகந்து காதலிக்கும் கருத்துடையோர்க்கு இச்சிறு நூல் அர்ப்பணம். அருளாளன்பால் அவர்கள் அடையும் அனுபவத்தை அணுவளவேனும் இது அபி விருத்தி செய்யுமாயின், அதுவே அச்சமின்றி இதை அச்சிட்டதினல் அடியனேன் அடையும் பயன். இதில் அடங்கிய அபிப்பிராயங்களையும் அனுபவங்களையும் உகவாத உள்ளத்தவர்க்கு ''என் நெஞ்சினல் நோக்கிக்

காணீர்'' என்பதொன்றே அடியேன் செய்யக்கூடிய விக்ஞாபனம்.

இந்நூலுக்கு "தேசிகவரதன்'' என்று உரிய பெயரைப் புனைந்ததுமன்றி, முன்னுரை யொன்றை யெழுதிப் பொருளல்லாத இப்புத்தகத்தைப் பொருளாக்கிப் பேருதவி புரிந்த பேரறிவாளற்கு அடியேனுடைய ஹார்த்த மான வந்தனைகளை இதன் மூலம் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். (தி. ராமஸ்வாமி, **மைலாப்பூர், ஆங்கீரஸ வருஷம், வைகாசி விசாகம்.**)'' என்பது அந்நன்னூலிற்றிகழும் "**முகவுரை.**''

"ஸ்வாமிதேசிகன், அவதரிப்பதற்குப் பலவாண்டுகள் முன்னரே தோன்றி ஸ்ரீ வைஷ்ணவத்தை உலகில் நாட்டிய நம்மாழ்வார் தேசிகன் திருவவதாரம் தான் "எப்பாலைக்கும் சேமத்தது'' (எக்காலத்திற்கும் க்ஷேமம் பயப்பது) என்று மங்களாசாஸனம் செய்தருளியிருக்கிறார் திருவிருத்தத்தில். "நானிலம் வாய்க்கொண்டு'' என்ற பாசுரத்தில் பொய்கை ஆழ்வார் அவதரித்த பிரதேசமாகிய திருவெஃகாவை "கால் நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது'' என்று நிர்த்தேசித்து, தேசிகன் திருவ வதாரஸ்தலமாகிய அடுத்திருக்கும் திருத்தண்காவை "அம் பூந்தேனிளஞ்சோலை அப்பாலது எப்பாலைக்குஞ் சேமத் ததே'' என்று மங்களாசாஸநம் செய்தருளியிருக்கிறார். திருவெஃகா பொய்கை யாழ்வார் அவதாரஸ்தலம். திருத் தண்கா தேசிகன் அவதாரஸ்தலம். உபயவேதாந்த தர்சனம் ஒரு ஐப்பசித் திருவோணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு புரட்டாசித் திருவோணத்தில் சொல்லவேண்டியவற்றை யெல்லாம் சொல்லிப் போந்தமையாலே முற்றுப்பெற்றது போலும். எப்பாலைக்கும் மேலுள்ள ஆசார்யர்களெல்லாம் அதை வளர்த்து பிரசாரம் செய்த பேர்கள். சேமத்தது

என்று ஆழ்வார் அருளிச் செய்த பெருமை தேசிகனிடத்தே தங்கியது,'' (**ஸேவா ஆண்டுமலர்**) என்ற இவரது அமுத மொழிகள் காண்க.

இப்பெருந்தகையாரும் இவரது உற்றார் உறவினரும் அத்திகிரி அருளாளப் பெருமாளின் பூரண வநுக்ரஹத்தை என்றும் பெற்று இன்புறுவாராக.

**பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.**

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
6-6-1952.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.
காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச் செய்த

# ஸத்யவ்ரத க்ஷேத்ரமாஹாத்ம்யம்

என்கிற

# ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்.

தனியன்கள்.

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:
கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தா சார்ய வர்யோமே
ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

ராமாநுஜ தயா பாத்ரம்
ஜ்ஞாந வைராக்ய பூஷணம்,
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம்
வந்தே வேதாந்த தேசிகம்.

நேரிசை வெண்பா.

சீரொன்று தூப்புற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்
அருளிச் செய்த

# ஸத்யவ்ரத க்ஷேத்ரமாஹாத்ம்யம்
என்கிற
# ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்.

**தனியன்கள்.**

மாநார்ஹம் மஹதாம் மஹா நடஜடா பர்யந்த நிர்யந்த்ரண
க்ரீடா பந்துர ஸிந்துராஜ மஹிஷீ ஜந்மாஸ்பதம்த்பதம்,
மாதங்காசல மௌலி மண்டநமணேர் வந்தாரு ப்ருந்தாரக
ச்ரேணீ சேகர பாரிஜாத கலிகா சூடால மீடாமஹே.

வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி
வாழி யெதிராசன் வாசகத்தோர்—வாழி
சரணு கதியென்னுஞ் சார்வுடன் மற்றென்றை
அரணுகக் கொள்ளாதா ரன்பு. (1)

ஸகல லோக ஹிததம விஷய விவித வேதாந்தோப ப்ரும்ஹணங்களான புராணங்களில் முக்யதமமாகையாலே முற்பட எண்ணப்பட்ட ப்ரஹ்மாண்ட புராணத்தில் ஸத்ய வ்ரத க்ஷேத்ர மாஹாத்ம்ய முக்யத்தாலே ஸந்தர்சிதமான பேரருளாளன் பெருமையை பாவுகரான பகவந் நிஷ்டருடைய ஹ்ருதயரஞ்ஜநார்த்தமாக மநஸ்ஸிலே பாவமும், வாக்கிலே ராகமும், கரத்திலே தாளமுமாக, பாவ ராக தாளங்களை வகுத்த பரத சாஸ்த்ரத்தின்படியே பண்ணும் இசையும் திகழப்பார்க்கின்றோம். இத்தைக் குறிக்கொண்டு கேட்டருள்மின்.

எண்டிசையுங் கடலேழு மலைக ளேழு
மீரேழு வையகமும் படைத்தி லங்கும்
புண்டரிகத் தயன்புணர்த்த பெரிய வேள்விப்
புனிதநறும் போக்கியத்தை யுகந்து வந்து
தொண்டையெனு மண்டலத்தி னடுவிற் பாரிற்
றூநிலமெய் விரதத்திற் றேன்றி நின்ற
கொண்டலருட் குணமேநாங் கூறு கின்றேங்
கூர்மதியீர் குறிப்பாகக் கொண்மி னீரே. (2)

வம்மின் புலவீ ரருளாளப்
பெருமா ளென்று மருளாழி
யம்மா னென்றுந் திருமகளைப்
பெற்று மெனெஞ்சங் கோயில்கொண்ட
பேரரு ளாளரென் றும்வியப்பா
விருதா தும்படி கரைபுரண்ட
கருணைக் கடலை யெவ்வண்ணம்
பேசுவீ ரீதென்ன பாங்கே. (3)

ஒன்றே புகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளா
லன்றே யடைக்கலங் கொண்டநம் மத்தி கிரித்திருமால்
இன்றே யிசையி னிணையடி சேர்ப்ப ரினிப்பிறவோம்
நன்றே வருவ தெல்லாநமக் குப்பர மொன்றிலதே. (4)

அகில ஜகதேகசேஷியாய், அகில ஜகதந்தர்யாமியாய், அகில ஜகதாதாரனாய், அகில ஜகதேககாரணபூதனாய், அகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதானனாய், அபார காருண்ய, ஸௌசீல்ய, வாத்ஸல்ய, ஔதார்ய, ஐச்வர்ய, மஹோததியான ஸ்ரீய:பதி புருஷோத்தமன் “ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லாவன்று” மஹதகங்காராதி க்ரமத்தாலே ப்ரஹ்மாண்ட பர்யந்தமாக ஸ்ருஷ்டித்து ; “தேவும் எப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப் படைத்து” “திசைமுகன் கருவுள் வீற்றிருந்து”; ப்ரஜாபதி, பசுபதி, ஸுரபதி, பித்ருபதி, ஜலபதி, தனபதி முதலான போக்த்ரு ப்ரபஞ்சத்தையும்,

அதல, விதல, ஸுதலாதிகள் என்றும், பூம்யந்தரிக்ஷ ஸ்வர்காதிகள் என்றும் சொல்லுகிற போகஸ்தாநங்களையும், இவற்றிலுட்பட்ட பௌம, திவ்ய, போக்ய போகோபகரண விசேஷங்களையும், விவித விசித்ர ஸந்நிவேசங்களாகப் பகுத்து; "பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப் பதங்களும் பதங்களின் பொருளும் பிண்டமாய் விரிந்த பிறங்கொளியனலும் பெருகிய புனலொடு நிலனும் கொண்டல் மாருதமும் குரைகடல் ஏழும் ஏழு மாமலைகளும் விசும்பும் அண்டமும்தானாகி" நின்று; தனக்கு ஔரஸ புத்ரனுமாய், அவ்யவஹித சிஷ்யனுமான சதுர்முகனை சதுர்தசபுவந நிர்வாஹகனுக்கி வைத்தருள; இவ்வதிகாரம் பெற்ற ப்ரஹ்மா நாபிஜாதனைய்த் தோன்றச் செய்தே அபிஜாததமனுகையாலும், ஸர்வதோ முகமாக வேதப்ர வர்தநம் பண்ணுகையாலும், ஸரஸ்வதீ ஸஹசரித தர்மா வாகையாலும், நாலுவர்ணங்களையும் ஸ்ருஷ்டித்த நாநாவித ஸாமர்த்யத்தாலும், 'நமக்கு நிகர் ஆர்' என்று அபிஜந, வித்யா, வ்ருத்தகர்வங்களும் ஸ்வாதந்த்ரியச் செருக்கும் ஏறி, "கறந்தபாலுள் நெய்யேபோல் இவற்றுள் எங்கும் கண்டுகொள் இறந்து நின்ற பெருமாயனை" ஸ்வஸாமர்த்ய ஸாத்யமான ஸமாதியைக்கொண்டு ஸாக்ஷாத்கரிக்கலாம் என்று பார்த்து, "இளைப்பினை இயக்கம் நீக்கி இருந்து முன்னிமையைக் கூட்டி, அளப்பில் ஐம்புலனடக்கி, அன்பவர்கண்ணே வைத்து, துளக்கமில் சிந்தை செய்து தோன்றலும் சுடர்விட்டாங்கே, விளக்கினை விதியில் கண்டு மெய்மையைக்" காண ஒருப்பட்ட வள்விலே பரஸ்வரூப ஸாக்ஷாத்கார விரோதியா யிருப்பதொரு மாளாதவல் வினை இவனை ஸமாதியில் நின்றும் மீட்டது.

அப்பொழுது,

வம்பவிழ் போதமர் மாத ருகந்தவம் மாநிதியைத்
தன்பல மேகொண்டு காணக் கருதிய தாமரையோன்

முன்பல குற்றத்து வல்வினை மொய்க்க முகிழ்மதியா
யம்புலி வேண்டிய பாலனைப் போல வழுதனனே. (5)

இப்படிக் கலங்கின ப்ரஹ்மா, 'என்னே! என்னே! நமக்கு ஸர்வாந்தராத்ம விஷயமான ஸமாதி கை புகுராமைக்குக் காரணம் என்?' என்று விசாரித்து, "நின்றவா நில்லாதே" கபிச பலமான அந்த: கரணத்தின் கஷாய பாகம் பிறவாமை' என்று பார்த்து, மநோமாலிந்ய ஹேதுவான கர்ம விசேஷத்தைக் கழிக்கப் பெருதே, இத்தனை நாளும் என்ன கார்யம் செய்தோம், "இமையோர் வாழ்தனி முட்டைக்கோட்டையிலே" கூறுசெய்வதாக ஏறவு மிழியவும் நெடுங்காலம் நிரர்த்தகமாக காயக்லேசம்பட்டோம் என்று "நெஞ்சுருகிக் கண்பனித்து நெடுமூச் செறிந்து" நிலத்தைப் பார்த்திருந்தான்.

அடங்காக் கரணங்க ளைந்துட னுறு மடக்கிமுன்னம்
நெடுங்கால மிந்நிலை மேநிலை யாய்ப்பூண்டு நீடுறைவான்
சடங்காற் பெரிய தவங்கள்செய் தேனென்ன தன்மையிதென்
றிடங்காத் திருந்த திசைமுகன் றன்னை யிகழ்ந்தனனே. (6)

"யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:,
புநஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரம."

இப்படி அதிசயிதைச்வர்யஹேதுவான தபஸ்ஸைப் பண்ணி, அதிகாரம் என்பதோர் அளறிலே அழுந்தி அநுதப்தனன ப்ரஹ்மா மதுஸூதந கடாக்ஷ விசேஷத்தாலே 'மோக்ஷோபயுக்தமான தபஸ்ஸுக்கு நிலமாவது எது' என்று நிரூபித்து, 'பூமியொழிந்த லோகங்கள் பதின் மூன்றும், பூமிதன்னில் ஜம்பூத்வீப மொழிந்த மஹாத்வீபங்கள் ஆறும், ஜம்பூத்வீபம் தன்னில் பாரதவர்ஷ மொழிந்த வர்ஷங்கள் எட்டும் போக பூமிகளாகையாலே புண்யகர்ம விசேஷாநுஷ்டாநத்திற்கு உசித க்ஷேத்ரங்கள் அன்று' என்று உபேக்ஷித்து ஸர்வதக்ஷிணமாய் ஸர்வதர்

மாநுஷ்டாந யோக்யமான பாரதவர்ஷத்தில் வந்து புகுந்தான்.

விண்ணுலகில் வீற்றிருந்த மேன்மை யாலும்
வேதங்க ளீரிரண்டும் விரித்த லாலும்
கண்ணனை நான் கருத்துறவே காண்ப னென்னக்
காணுமல் விலக்கியதன் வினையைக் காணு
வெண்ணியநற் புவனங்க ளேழு மாறு
மிருமூன்று தீவமுமெட் டிடமும் விட்டுப்
பண்ணியநல் விரதமெலாம் பலிக்கு மென்று
பாரதத்தைப் பங்கயத்தோன் படிந்திட் டானே. (7)

இப்படி ப்ரஹ்மா பாரதவர்ஷத்திலே வந்து புகுந்து தான் ப்ரதாநமாக நினைத்திருந்ததொரு புண்யக்ஷேத்ரத்திலே ஒரு காலாலே நின்று ஊர்த்வ புஜனும் உச்ச்வாஸ நிச்வாஸங்களை அடக்கியும், ஒருவராலும் அநுஷ்டிக்க வொண்ணுத தபஸ்ஸைப் பண்ணினவளவிலும், அந்த: கரணம் அந்தராத்மதர்சநாநுகுணமல்லாமையாலே அத்யந்த விஷண்ணனுயிருக்க; அசரீரியாயிருப்பதொரு வாக்கு ஆகாசத்திலே கிளம்பி, 'வாராய், ப்ரஹ்மாவே! நீ வெறுக்கவேண்டுவதில்லை; உனக்கு ஸமாதிவிரோதியான கர்மம் கழிகைக்கு ஒரு உபாயத்தை உபதேசிக்கிறேன்; அதிகாரமாகிற ஆநந்தாநுபவத்திலே அழுந்தின உனக்கு ஆயிரம் அச்வமேதம் பண்ணினுலல்லது அந்த:கரணசுத்தி உண்டாகாது; கர்தவ்ய கௌரவத்திற்கும் காலவிளம்பத்திற்கும் நீ அஞ்சினுயாகில், ஒரு அச்வமேதத்தாலே ஆயிரம் அச்வமேதத்தின் பலம் ஸித்திக்கும்படி அநவதிகமாஹாத்ம்யமான ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திலே சென்று, அதின் நடுவே ஸர்வவ்யாபியான ஸர்வேச்வரன் நித்யமாக விசேஷ ஸந்நிதிபண்ணியருளுகிற ஸ்ரீஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி, அங்கே ஸர்வயஜ்ஞுங்களிலும் ப்ரதானமான அச்வமேதத்தாலே ஸர்வயஜ்ஞு

போக்தாவான ஸர்வேச்வரனை ஆராதிப்பாய்' என்றது. அந்த அசரீரிவாக்யத்தைக் கேட்டு, அதிஸந்துஷ்டனை ப்ரஹ்மா அப்பொழுதே ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திலே வந்து விச்வகர்மாவை அழைத்து, 'நாம் இங்கே ஸர்வபாப ப்ராயச்சித்தமாக வேதங்கள் விதித்த வைஷ்ணவமான அச்வமேதத்தைப் பண்ணப் பாராநின்றோம். சில்ப வித்யாவிசாரதனை நீ ஹஸ்திகிரியை சதுரச்ரமாக வகுத்து, அதையே உத்தரவேதியாக்கி, யாகசாலையைச்சமைத்து, நம்முடைய யக்ஞத்திற்கு வருகிறதேவ, அஸுர, யக்ஷ, ராக்ஷஸ, கிந்நர, கிம்புருஷ, ஸித்த, வித்யாதர, மநுஷ்யாதிகளெல்லாம் நெருக்கமற இருக்கும்படி நீண்டு அகன்று அமைந்திருப்பதொரு ரமணீய ராஜதானியைச் சடக்கெனச் சமைப்பாய்' என்று அதித்வரையோடே ஆக்ஞாபித்தான்.

ஈத்திசை நிலனு மெய்தி யருந்தவஞ் செய்த வந்நாள்
சத்திய விரதஞ் செல்வா யென்றதோ ருரையின் சார்வால்
அத்திசை சென்ற ழைத்தங் கமரரில் லெடுப்பான் றன்னை
யுத்தர வேதி செய்யென் றுரையணங் கிறையு ரைத்தான். (8)

இப்படி ப்ரஹ்மா ஆக்ஞாபிக்க, விச்வகர்மாவும் ஸர்வ குணோத்தரமான ஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி, 'இது ஸர்வேச்வரன் ஸந்நிதி பண்ணுகைக்கு இடமாம்' என்று விசாரித்தான்.

உத்தமவ மர்த்தலம மைத்ததோரெ
ழிற்றனுவி னுய்த்த கணையா
லத்திரவ ரக்கன்முடி பத்துமொரு
கொத்தெனவு திர்த்த திறலோன்
மத்துறுமி குத்ததயிர் மொய்த்தவெணெய்
வைத்ததுணு மத்த னிடமா
மத்திகிரி பத்தர்வினை தொத்தறவ
றுக்குமணி யத்தி கிரியே. (9)

20108

இவ்வண்ணம் சிந்தித்து, உத்தரவேதியும் யஜ்ஞசாலையும் படைவீடுமாக வகுத்து விச்வகர்மா காட்டக்கண்ட ப்ரஹ்மாதனக்கு பஹுமதி விஷயமாகையாலே இந்நகரத்திற்கு 'காஞ்சீ' என்று பேராக்கினன்.

"அயோத்யா மதுரா மாயா
காசீ காஞ்சீ ஹ்யவந்திகா,
புரீ த்வாரவதீ சைவ ஸப்தைதா
முக்திதா: ஸ்ம்ருதா:"

திண்மணிகள் பொன்னுடனே சேர்த லாலுஞ்
சிதையாத நூல்வழியிற் சேர்த்தி யாலும்
வண்மையெழு மீரிரண்டு வண்ணத் தாலும்
வானவர்க்கும் வியப்பான வகுப்பி னாலு
முண்மையுடை வாசியொளி யோசை யாலு
மொருகாலு மழியாத வழகி னாலும்
மண்மகளார்க் கலங்கார மென்ன மன்னு
மதிட்கச்சி நகர்கண்டு மகிழ்ந்திட் டானே. (10)

இப்படி பூமிக்கு அலங்காரமாக ஒரு காஞ்சியைச் சமைத்து, அங்கே அச்வமேதயாகத்திலே உத்யுக்தனை ப்ரஹ்மா மரீசி முதலான ப்ரஹ்மர்ஷிகளை ரித்விக்குகளாக்கிக் கொண்டு, 'ஸரஸ்வதீ என்கிற ஆற்றிலே தபஸ்ஸு பண்ணுகிற தன்ப்ரதாந பத்நியான ஸரஸ்வதியை அழைத்துக் கொண்டு வருவாய்' என்று ஸ்ரீ வஸிஷ்ட பகவானை அநுசாஸித்தான்.

காமங்கள் பலகொண்ட வேதங் கொண்டு
கைதவமே செய்வார்க்குக் காண கில்லாப்
பூமங்கை கேள்வனை நான் கண்டு போற்றப்
புண்ணியத்தி னிகரில்லா விரதம் பூண்டேன்
சாமங்கள் கழிவதன்முன் சடக்கெ னப்போய்த்
தன்னாற்றிற் றனியிருந்து தவஞ்செய் கின்ற
நாமங்கை வந்திடநீ யழைப்பா யென்று
நன்மகனை நான்முகன்று னவின்றிட் டானே. (11)

இப்படி ப்ரஹ்மாவாலே நியுக்தனான ஸ்ரீ வஸிஷ்ட பகவான் ஸரஸ்வதி பக்கலிலே சென்று ப்ரணிபாதாபி வாதநங்களைப் பண்ணி, ப்ரஹ்மாவின் யாகத்தையறிவிக்க; ப்ரணயகலஹ கலுஷிதையான ஸரஸ்வதி வாராதவளவில், ப்ரஹ்மா ஸாவித்ரீ முதலான பத்நிகளைக்கொண்டு யஜ்ஞம் பண்ணத் தொடங்க; தேவஸத்கார குபிதரான அஸுரர்கள் இந்த யஜ்ஞத்தைக் கலக்க நினைத்துச் சென்று ஸரஸ்வதிக்கு அறிவிக்க; அவளும் அதிகுபிதஹ்ருதயை யாய்க்கொண்டு தக்ஷிணா பதத்திலே போந்து, வேறொரு மஹாநதியாய்ப் பெருகி, ப்ரஹ்மாவினுடைய யஜ்ஞபூமியை அழிப்பதாக உபக்ரமித்தாள்.

அன்னவடி வாளசையு மன்னநடை யாளுயரு
மன்னவர சேறி வருவா
ளத்தனய னத்தனய னுத்திதனை
யத்திதென வுத்தி புரியாள்
நன்னடைவி டாநடமி தென்னநட வாநடுவு
நண்ணுகுவ டேறி யிழிவா
ணற்பதிக ளற்பதிக ளற்பதிகள் கற்புரள
வற்புதம ருற்க தியினுற்
கன்னடவி டாவிடமி லுன்னதிசி ருவிகட
மன்னுகிரி கூட மிடியக்
கட்டவிடை யிற்றுவிழ முற்றும்விழி
யுற்றடைய விட்ட ருகுற
வன்னநய சீரயனி தென்னெனவி ழாவமரர்
மன்னுபதி யேறி மகிழ
வச்சுதன ணைத்தனுவி லத்திசைவ
ரத்தகைய வற்ற னுகினள். (12)

அன்று நயந்த வயமேத மாவேள்வி
பொன்ற வுரையணங்கு பூம்புனலாய்க் —கன்றிவர
வாதி யயனுக் கருள்செய் தணையானன்
றுதை யரவணையான் றன். (13)

இப்படி ஸகலலோகைக ஸேதுவான ஸர்வேச்வரன் ஸரஸ்வதீப்ரவாஹ மத்யத்திலே அரவணேயோடே கூட அணையாகக் கிடந்தவளவில், கண்ணும் மனமும் களிக்கக் கண்டுநின்ற த்ரைலோக்யவர்த்திகளும் இவ்வண்ணம் பேசினார்கள்.

தரணியின் மன்னி யயனுர் தனித்தவங் காத்தபிரான்
கருணே யெனுங்கட லாடித் திருவணே கண்டதற்பின்
திரணர கெண்ணிய சித்திர குத்தன் றெரித்துவைத்த
சுருணேயி லேறிய சூழ்வினே முற்றுந் துறந்தனமே. (14)

இப்படி வேகவதியாய் வந்த ஸரஸ்வதியினுடைய கோப வேகமடங்கும்படி வெஃகாவில் துயில்மர்ந்த வேந்து கடாக்ஷிக்க, கலக்கமற்றுவந்த ஸரஸ்வதியையும் கூட்டிக் கொண்டு ப்ரஹ்மா அச்வமேத யாகத்தை நடத்த, வபா ஹோமம் ப்ரவ்ருத்தமான வளவிலே ஆயிரம்கோடி ஆதித்யர்கள் உதித்தாற் போலே உத்தரவேதி மத்யத்திலே ஒரு மஹாதேஜஸ்ஸு தோன்றிற்று.

சுகலேச மெண்ணிய சூழ்வினே தீர்க்கத் துணிந்தயனு
ரகலாத வன்புடன் கொண்ட வயமேத வேதியின்மேற்
புகலோங்கு பொன்மலே யன்னவோர் புண்ணிய கோடியுடன்
பகலோன் பகல்விளக் காகப் பரஞ்சுடர் தோன்றியதே. (15)

சைத்ரே மாஸி ஸிதே பக்ஷே சதுர்தச்யாம் திதௌ ம்நே,
சோபநே ஹஸ்த நக்ஷத்ரே ரவிவார ஸமந்விதே.
வபாஹோமே ப்ரவ்ருத்தேது ப்ராதஸ்ஸவநகாலிகே,
தாதுருத்தர வேத்யந்த: ப்ராதுராஸீஜ்ஜநார்தந:.

இப்படிப் பெருமாள் தோன்றினபடிக்கு நித்யஸூரிகள் முகத்தாலே 'காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் ஆர்த்தன.'

ஆப்த : பாண்டவதூதோயமாப்தோ தேவகிநந்தன:
ஆகதோ வாஸுதேவோ யமித்ய ச்ராவி ச காஹளீ.
சரண்யஸ்ஸர்வலோகாநாம் நாராயண உபாகத:

சங்கசக்ரகதாபாணிர் நாராயண உபாகத :
இதிகாஹளி நாதேந கர்ணேஷ்வம்ருதஸேசநம்
குர்வதா ஸஹஸா யோகாத்விரராம பிதாமஹ:

பெருமையுடை யத்திகிரிப் பெருமாள் வந்தார்
பேராத வருள்பொழியும் பெருமாள் வந்தார்
அருமறையி னுச்சிதனி னின்ருர் வந்தார்
அங்கமுட னவையாகும் பெரியோர் வந்தார்
திருவுரையாய்த் தாம்பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளாற் செழுங்கலைக டந்தார் வந்தார்
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே. (16)

அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்
ஆனைபரி தேரின்மே லழகர் வந்தார்
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரந் தருந்தெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென வோலமிட வல்லார் வந்தார்
உத்தரவே திக்குள்ளே யுதித்தார் வந்தார்
உம்பர்தொழுங் கழலுடையார் வந்தார் தாமே. (17)

இப்படி ஆவிர்ப்பவித்தருளின பெருமாளுடைய மஹா தேஜஸ்ஸிலே ப்ரமமேறி ஓடின ப்ரஹ்மாவும் தேவர்களும் ரிஷிகளும் வருந்திக் குறித்துப்பார்த்து, அத்தேஜோ மண்டலத்திற்குள்ளே புண்யகோடி விமாநத்தையும், அவ் விமாந மத்யத்திலே ஹவிர்கர்ப முகரான பெருமாள் காந்தி வர்ஷியா யிருப்பதொரு காளமேகம் போலே நின்றருளின படியையும் கண்டு ஹர்ஷவிஸ்மய பரவசராய்க் கொண்டு இங்ஙனே பேசினர்கள்.

திருபரி திசைந்த மகுடமு
மெழின்மதி திகழ்ந்த வதனமு
மிருவகையி லங்கு குழைகளி
லெதிர்பொர வுகந்த மகரமும்

ஒருதக வுயர்ந்த திருமக
ளொளிமறு வின்மன்னு மகலமும்
உருவரு வுமிழ்ந்த வுதரமு
முலகடைய நின்ற கழல்களும்

மருவினிடை யோங்கு புனலென
மலைகுனிய நின்ற மலையென
மருளற விளங்கு மொளியென
மலரய னுகந்த பயனென

உருவிலுறை கின்ற வுயிரென
வடியவ ருகந்த வமுதென
அருமறைக ளொன்றி யடிதொழ
வருள்வரதர் நின்ற பெருமையே. (18)

இவ்வண்ணம் ஆச்சர்யரஸத்தாலும் பக்திப்ரகர்ஷத்தாலும் ப்ரேரிதராய்க்கொண்டு தொழுவதெழுவதாய், இவருக்கு நாம் அடியோமாகப் பெறுவதே' என்று வேதாந்த ஸாரமான அர்த்தத்தை இங்ஙனே விண்ணப்பம் செய்தார்கள்.

சித்த சித்தெனவி ரித்து ரைத்தனவ
னைத்த மைத்துறையு மிறைவனுர்
சிறிய பெரியவுரு வடைய வுடலமென
நடல மிலதிலகு நிலையினுர்

சித்தி ரத்தெழிலை யொத்த பத்தரொடு
முத்தர் பித்தியெனு முணர்வினுர்
சிதைவின் மறைநெறியி லெறிய வுருமுறைகண்
முறிய சிறையரிய நிறைவினுர்

கத்து விக்கவல கத்து வித்தைவழி
கற்ற வர்க்கசைவின் மாயனுர்
கபிலர் கணசரணர் சுகதர் சமணரரர்
வழிக ளழியுமருண் மொழியினுர்

கத்தி லக்கிலும ருக்கு லத்திலும
சித்தி லொக்குமொரு முதல்வனர்
கரண மிடுகடிய பதினெ ரிருடிகமு
மடைய முடியுமடி யிருடியார்
ஒத்த வனைத்துலகு மொற்றி யொற்றிவரு
மிப்ப வத்திசையு மிசைவினு
ருருவ மருவமெனு முலகின் முடுகிலென
லுவமை யிலதிலகு தலைவனர்
உத்த மப்படிவ குத்த வித்தைகளி
லுத்த ரிக்கவுணர் குணவனு
ருரிய கிரிசைகளி லரிய தொருவிரகு
தெரிய விரையுமவர் பரிவினர்
சத்த சத்தெனும வைத்த ணைத்தவினை
தொத்த றுக்கவல துணிவினர்
சரியு மளவிலுரி யவரை யறிவரிய
தமனி நெறிசொருகு விரகினர்
தத்து வத்திரளு தைத்து தைத்தடைவு
தத்து விக்குமவர் தலைவனர்
தருகை யுணருமவர் சரண மணுகவிட
லரிய வருள்வரத ரடியமே. (19)

ப்ரஹ்மா அப்பொழுது ஸம்ப்ரம, ஸந்தோஷ, ஸாத்வஸங்களையுடையவனுய்க் கொண்டு கிட்டிச்சென்று, ஸுரி போக்யமான சுபாச்ரயத்தை அநுபவித்துத் தான் பெற்ற பேற்றை இங்ஙனே பேசினுன்.

திருமகண்மண் மகணீளை முதலா வெல்லாத்
தேவியருந் தன்னுடனே திகழ்ந்து நிற்கத்
தருமமிரு மூன்றுமுத லனைத்துந் தோன்றத்
தன்னனைய சூரிகடன் னடிக்கீழ் வாழ
வருமறைசே ரளவில்லா வவனி யின்க
ணரவணைமேல் வீற்றிருப்பா லனைத்துங் காக்குங்
கருமணியைக் கரிகிரிமேற் கண்டே னென்றன்
கடுவினைக ளனைத்தும்நான் கண்டிலேனே. (20)

இப்படிக் "கண்கள் காண்டற்கரிய" மநோரத விஷயத்தைக் கண்ட ப்ரஹ்மா,

ததஸ்தமுத்வீக்ஷ்ய புரம் ஸ்திதம் ஹரிம்
விதாநவேத்யாம தஸீஸமப்ரபம்,
ஸ தத்க்ஷணோத்பூதஸுகார்ணவாப்லுதோ
யயௌ ததா க்ருத்யவிவேகமூடதாம்.
ப்ரதக்ஷிணம் ப்ரைதி ததாப்ரதக்ஷிணம்
ப்ரயாதி தூரம் புநரேதி ஸந்நிதிம்,
கரணே பஸ்பர்ச மமார்ஜ தத்வபு:
ப்ரியேண காடம் பரிஷஸ்வஜே க்ஷணம்.

இப்ரகாரத்திலே "மொய்ம் மாம்பூம் பொழில்" படியே அக்ரமமாக ஹர்ஷ சேஷ்டிதங்களைப் பண்ணின ப்ரஹ்மா சிறிதுபோது ஓடிக்கூடித்தரித்து, நாச்சிமாருடனே பெரிய பெருமாள் எழுந்தருளியிருக்கிற நிலையை இங்ஙனே அநுபவித்தான்.

பெடையி ரண்டையொ ரனம டைந்துபி
ரிந்தி டாவகை பேசலாம்
பெருகு மருவிக ளருகு மருவிய
பெரிய மணிவரை பயிலலாம்
பிடியிரண்டொடு களப மொன்றுபி
ணைந்த பேரழ கோதலாம்
பிரிவி லொளியொடு நிழலு மருகுறு
மிரவி யிலகுதல் பரவலாம்
கொடியி ரண்டொடு விடபி யொன்றுகு
ளிர்ந்த வாறுகு லாவலாங்
குறைவில் சுருதியு நினைவு மிலகிய
தரும வருநிலை யென்னலாம்
அடியி ரண்டையு மடையு மன்ப
ரறிந்த பேரரு ளாளனு
ரணுகு மலர்மக ளவனி மகளொடு
கரடி கிரிநிலை கவர்தலே. (21)

அநந்தரம் அநந்த மங்கல குணார்ணவரான பெருமாளுடைய திவ்ய குணங்களை அநுபவிக்கத் தொடங்கி, ஒரொரு ஆகாரங்களுக்கு ஒரொரு உபமாநாபாஸங்களைத் தேடி, குண ஸமுதாயத்திற்கு ஒரு உபமாநாபாஸம் தேடவொண்ணாதென்று கொண்டாடினான்.

வேரொப்பார் விண்முதலாங் காவுக் கெல்லாம்
விழியொப்பார் வேதமெனுங் கண்ட னக்குக்
காரொப்பார் கருணைமழை பொழிந்தி டுங்காற்
கடலொப்பார் கண்டிடினுங் காணாக் கூத்தால்
நீரொப்பார் நிலமளிக்குந் தன்மை தன்னா
னிலமொப்பார் நெடும்பிழைகள் பொறுக்கு நேரால்
ஆரொப்பா ரிவர்குணங்க ளனைத்துங் கண்டா
லருளாளர் தாமெனினுந் தமக்கொவ் வாரே. (22)

இப்படிப் பெருமாளுடைய குணங்களை வகையும் தொகையுமாக வகுத்து அநுபவிக்கிற ஸர்வதோமுகனை ப்ரஹ்மாமேல் முகத்தாலே யஜ்ஞவாடத்தின் மேல்பாதியிலே வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தையும், கீழ் முகத்தாலே உத்தரவேதியிலே நின்றருளின பெருமாளையும் சேர அநுபவித்து, இங்ஙனே அநுஸந்தித்தான்.

" ஏகம் வேகவதீ மத்யே
ஹஸ்திசைலே ச த்ருச்யதே,
உபாய பலபா வேந
ஸ்வயம்வ்யக்தம் பரம் மஹ:" என்று.

இப்படி ப்ரஹ்மா மஹா ஹர்ஷ பரவசனாய் முகிழ்ந்த வுடம்பும் பனியரும்பின கண்களும் தழுதழுத்த மிடறும், தளர்ந்த நிலையுமாய்க் கொண்டு, தன் அதிகாரச் சுமையை மறந்து, அடிமையிலே அடி கொண்டு, ஸ்தோத்ர பரம் பரையை விண்ணப்பம் செய்ய, ப்ரஸாத ஸுமுகரான பெருமாள் 'உனக்கு வேண்டின வரம் கொள்வாய்' என்றருளிச் செய்தார்.

வரம் வரய தஸ்மாத் த்வம் யதாபிமதமாத்மந:,
ஸர்வம் ஸம்பத்ஸ்யதே பும்ஸாம் மயி த்ருஷ்டிபதம்கதோ.

எந்நில முங்குரத் தாற்குறி செய்த வெழிற்பரிகொண்
டன்ன முயர்த்தசெய் யோனன்று வேள்விசெய் வேதியின்மேன்
முன்னிலை யாகிய மூர்த்திய னுன்முக மற்றுமுனக்
கென்ன வரந்தரு வோமென்று நாத னியம்பினனே. (23)

அப்பொழுது ப்ரஹ்மாவும் 'நித்யஸூரிகள் ஸதா தர்சநம் பண்ண ப்ராப்தமான தேவரீருடைய திருமேனியை நான் கண்டனுபவிக்கப் பெற்ற இதொழிய வேறு எனக்கு வேண்டுவது ஒரு வரமுண்டோ? ஸம்ஸாரிகள் "பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந் நின்ற நீர்மை இனியாம் உறாதபடி" இங்கே தேவரீர் நித் யாவிர்பூதராய் நின்று வேண்டுவார்க்கு வேண்டும் வரம் கொடுத்து வாழ்வித்தருள வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தான்.

"வைகுண்டே து யதாலோகே
யதைவ க்ஷீரஸாகரே,
ததா ஸத்யவ்ரத க்ஷேத்ரே
நிவாஸஸ்தே பவேதிஹ.
ஹஸ்திசைலஸ்ய சிகரே
ஸர்வலோக நமஸ்க்ருதே,
புண்யகோடி விமாநேஸ்மிந்
பச்யந்துத்வாம் நராஸ்ஸதா."

என்று இப்படி ஸர்வ காலத்திலும் ஸர்வப்ராணிகளும் ஸாக்ஷாத்கரிக்கலாம்படி கோலம் செய்து இங்கே எழுந் தருளியிருக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்ய,

'தேவதிர்யக் மநுஷ்யாணா மஹம்
ப்ரத்யக்ஷதாம் கத:,
அத்ரைவ நிவஸிஷ்யாமி
ஸத்யமேதத் ப்ரவீமி தே.'

என்று இப்படிப் பெருமாள் அருளிச் செய்கையாலே க்ருதார்த்தனை ப்ரஹ்மா க்ருது சேஷத்தைத் தலைக் கட்டி, கார்த்த யுகதர்ம ப்ரக்ரியையாலே ஸம்பூர்ண ஸமா ராதநம் பண்ணி, பரம பாகவதரான மஹர்ஷிகளைக் குறித் துத் தான் பண்ணின அபிகம நாதி ரூபாச்சித்ர பாஞ்ச காலிக ஸமாராதநக்ரமத்தை ஸங்கிரஹித்து உபதேசித் தான்.

சென்று மலர்பறித் தெந்நாதன் சேவடிப் போதுகந்து
நன்றென நீர்சுடர் நன்முக வாசவெள் ளிலைகொடுத்துக்
கன்ன லிலட்டுவத் தோடன்னஞ் சீடை கறிபடைத்துப்
பின்னுஞ் செபித்தவன் பாதம் பணிமின்க ளென்றனனே. (24)

அநந்தரம் பெருமாளும் அதிஸந்துஷ்டராய், 'ப்ரஹ் மாவே! உனக்கு நான் தந்த அதிகாரக் குறை தீரும்படி ஸரஸ்வதீ ஸாவித்ரிகள் முதலான தர்ம பத்நிகளுடனே உன்னுடைய லோகத் தேறச் சென்று, அதிகார சேஷத்தை நடத்துவாய்' என்றருளிச் செய்ய, ப்ரஹ்மாவும் அண்டாந் தர்வர்த்ரிலோகங்களுக்கு மேலான ஸத்ய லோகத்திலே சென்று ஸத்யவ்ரத க்ஷேத்ர மாஹாத்ம்யத்தையும் ஸத்யவ்ரத ரான பெருமாள் திருவருளையும் அநுஸந்தித்துக்கொண்டு, ஸம்பூர்ண பகவதநுபவரஸபரித ஸமாதி விசேஷத்தாலே சரிதார்த்தனயிருந்தான்.

ஆழிநிலை வினைகடிவா னயமேத முடிந்ததற்பின்
வேழமலை நாயகனுர் விடைகொடுக்க விண்ணேறி
நாழிகையில் வானவரை மாற்றியிடு நான்முகன்ரு
னூழியெலா மழியாத யோகமடைந் திருந்தானே. (25)

ஆதி யுகத்தயன் கண்டிட நின்ற வருள்வரதர்
காத லுயர்த்த களிற்றைத் திரேதையிற் காத்தளித்து
வா துயர் தேவ குருவுக் கிரங்கித் துவாபரத்திற்
சோதி யநந்தன் கலியிற் றெழுதெழ நின்றனரே. (26)

புண்ட ரீகமு யர்த்தபு ராணனுர்
பொய்யின் மாமக வுத்தர வேதியிற்
கொண்ட லாரருண் மாரிபொ ழிந்திடக்
கொண்ட தோருயர் கூர்மதி யன்பினுற்
பண்டை நான்மறை மோலிப டிந்தநான்
பாரின் மெய்விர தக்கவி பாடினேன்
தொண்டை மண்டல வேதியர் வாழவே
தூய தென்மறை வல்லவர் வாழவே. (27)

உய்விரத மொன்றின்றி யடைந்தா ருய்ய
வொருவிரதந் தான்கொண்ட வுயர்ந்த மாலைச்
செய்விரத மொன்ருலுந் தெளிய கில்லாச்
சிந்தையினுற் றிசைபடைத்த திசைமு கன்ருன்
பொய்விரத நிலமெல்லாம் போயே மீண்டு
புகலிதுவே புண்ணியத்துக் கென்று சேர்ந்த
மெய்விரத நன்னிலத்து மெய்ம்மை யேத்தி
வேதாந்த வாசிரியன் விளங்கி னுனே. (28)

சீராருந் தூப்புற் றிருவேங் கடமுடையான்
ருரா ரருளாளர் தாணயந்து—சீராக
மெய்விரத நன்னிலத்து மெய்ம்மை யிதுமொழிந்தான்
கையதனிற் கனிபோலக் கண்டு. (29)

கவிகதகபஞ்ச வக்த்ரஸ்த்ரய்யந்த
குருஸ்த்ரி லோகமஹநீயம்,
ஸத்யவ்ரதமாஹாத்ம்யம் வ்யதநுத
லலிதமிதி வேங்கடேசகுரு:

ஸ்ரீ:

# அடைக்கலப்பத்து.

பத்திமுத லாமவற்றிற் பதியெனக்குக் கூடாம
லெத்திசையு முழன்ருேடி யிளைத்துவிழுங் காகம்போல்
முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சிதனில்
அத்திகிரி யருளாளர்க் கடைக்கலநான் புகுந்தேனே. (1)

சடைமுடியன் சதுமுகனென் றிவர்முதலாந் தரமெல்லா
மடையவினைப் பயனுகி யழிந்துவிடும் படிகண்டு
கடிமலராள் பிரியாத கச்சிநக ரத்திகிரி
யிடமுடைய வருளாள ரிணையடிக ளடைந்தேனே. (2)

தந்திரங்கள் வேறின்றித் தமதுவழி யழியாது
மந்திரங்க டம்மாலு மற்றுமுள வுரையாலு
மந்தரங்கண் டடிபணிவா ரனைவர்க்கு மருள்புரியுஞ்
சிந்துரவெற் பிறையவனுர் சீலமல தறியேனே. (3)

காகமிராக் கதன்மன்னர் காதலிகத் திரபந்து
நாகமர னயன்முதலா நாகநக ரார்தமக்கும்
போகமுயர் வீடுபெறப் பொன்னருள்செய் தமைகண்டு
நாகமலை நாயகனுர் நல்லடிப்போ தடைந்தேனே. (4)

உகக்குமவை யுகந்துகவா வனைத்துமொழிந் துறவுகுண
மிகத்துணிவு பெறவுணர்ந்து வியன்காவ லெனவரித்துச்
சகத்திலொரு புகலில்லாத் தவமறியேன் மதிட்கச்சி
நகர்க்கருணை நாதனை நல் லடைக்கலமா யடைந்தேனே. (5)

அளவுடையா ரடைந்தார்க்கு மதனுரையே கொண்டவர்க்கும்
வளவுரைதந் தவனருளே மன்னியமா தவத்தோர்க்கும்
களவொழிவா ரெமரென்ன விசைந்தவர்க்குங் காவலராந்
துளவமுடி யருள்வரதர் துவக்கிலெனை வைத்தேனே. (6)

உமதடிக ளடைகின்றே னென்றொருகா லுரைத்தவரை
அமையுமினி யென்பவர்போ லஞ்சலெனக் கரம்வைத்துத்
தமதனைத்து மவர்தமக்கு வழங்கியுந்தான் மிகவிளங்கும்
அமைவுடைய வருளாள ரடியிணையை யடைந்தேனே. (7)

திண்மைகுறை யாமைக்கு நிறைகைக்குந் தீவினையா
லுண்மைமற வாமைக்கு முளமதியி லுகக்கைக்குந்
தண்மைகுறை யாமைக்குந் தரிக்கைக்குந் தணிகைக்கும்
வண்மையுடை யருளாளர் வாசகங்கண் மறவேனே. (8)

சுருதிநினை விமையறியுந் துணிவுடையார் தூய்மொழிகள்
பரிதிமதி யாசிரியர் பாசுரஞ்சேர் தருக்கணங்கள்
கருதியொரு தெளிவாளாற் கலக்கமறுத் தத்திகிரிப்
பரிதிமதி நயனமுடைப் பரமனடி பணிந்தேனே. (9)

திருமகளுந் திருவடிவுந் திருவருளுந் தெள்ளறிவு
மருமையிலா மையுமுறவு மளப்பரிய வடியரசுங்
கருமமழிப் பளிப்பமைப்புங் கலக்கமிலா வகைநின்ற
அருள்வரதர் நிலையிலக்கி லம்பெனநா னமிழ்ந்தேனே. (10)

ஆறுபயன் வேறில்லா வடியவர்க ளனைவர்க்கும்
ஆறுமதின் பயனுமிவை யொருகாலும் பலகாலும்
ஆறுபய னெனவேகண் டருளாள ரடியிணைமேற்
கூறியநற் குணவுரைக ளிவைபத்துங் கோதிலவே. (11)

ஸ்ரீ:

# அர்த்தபஞ்சகம்.

அமலனவி யாதசுட ரளவில்லா வாரமுத
மமலவுருக் குணங்களணி யாயுதங்க ளடியவர்க
ளமலவழி யாதநக ரழிந்தெழுங்கா வுடனெல்லாங்
கமலையுட னரசாளுங் கரிகிரிமேற் காவலனே. (1)

உள்ளபொரு ளனைத்துக்கு முருவநிலை கருமங்கள்
தெள்ளிசையின் வசமாக்கித் திகழ்ந்துயிரா யுரைகின்றான்
நள்ளிருடீர்த் தடியவர்க்கு நலங்கொடுக்குந் திருவுடனே
வள்ளலரு ளாளனெனும் வாரணவெற் பிறையவனே. (2)

பூதவுடல் புலன்கண்மனம் புல்லாவி புந்தியெனும்
யாதுமல னுயுலகில் யானெனுமிந் நுண்ணறிவாய்ச்
சேதனனு யடிமையுமா வுயிர்க்கெல்லாந் திண்ணுயிராய்த்
தீதலின்றித் திகழுஞ்சீ ரத்திகிரித் திருமாலே. (3)

தானடைத்த குணங்கருவி தங்கிரிசை வழியொழுக்கி
ஊனெடுத்துண் டுமிழ்ந்துழலு முயிர்க்கெல்லா முயிராகிக்
கானடத்திக் கமலையுடன் கண்டுகந்து விளையாடுந்
தேனெடுத்த சோலைகள்சூழ் திருவத்தி யூரானே. (4)

உய்யுமுற விசையாதே யொத்தவர்க்கே யடிமையுமாய்ப்
பொய்யுருவைத் தமக்கேற்றிப் புலன்கொண்ட பயன்கொண்டும்
ஐயுறவு மாரிருளு மல்வழியு மடைந்தவர்க்கு
மெய்யருள்செய் திடுந்திருமால் வேழமலை மேயவனே. (5)

விதைமுளையி னியாயத்தா லடியில்லா வினையடைவே
சதையுடல நால்வகையுஞ் சரணளிப்பா னெனத்தவழ்ந்து
பதவியறி யாதுபழம் பாழிலுழல் கின்றார்க்குஞ்
சிதைவிலரு டருந்திருமா றிருவத்தி நகரானே. (6)

யமநியம வாசனங்க ளியலாவி புலனடக்கந்
தமதறியுந் தாரணைக டாரையறு நினைவொழுக்கஞ்
சமமுறுமெய் சமாதிநலஞ் சாதிப்பார்க் கிலக்காகு
மமரர்தொழு மத்திகிரி யம்புயத்தா ளாரமுதே. (7)

புகலுலகி லில்லாது பொன்னருள்கண் டுற்றவர்க்கு
மகலகிலா வன்பர்க்கு மன்றேதன் னருள்கொடுத்துப்
பகலதனுற் பழங்கங்குல் விடிவிக்கும் பங்கயத்தாள்
அகலகிலே னென்றுறையு மத்திகிரி யருண்முகிலே. (8)

இருவிலங்கு விடுத்திருந்த சிறைவிடுத்தோர் நாடியினுற்
கருநிலங்கள் கடக்கும்வழி காவலராற் கடத்துவித்துப்
பெருநிலங்கண் டுயிருணர்ந்து பிரியாம லருள்செய்யு
முருநலங்கொண் டுறுந்திருவோ டுயரத்தி கிரியானே. (9)

தன்றிருமா துடனேதான் றனியரசா யுறைகின்ற
அந்தமில்பே ரின்பத்தி லடியவரோ டெமைச்சேர்த்து
முந்தியிழந் தனவெல்லா முகிழ்க்கத்தந் தாட்கொள்ளு
மந்தமிலா வருளாழி யத்திகிரித் திருமாலே. (10)

அயன்பணியு மத்திகிரி யருளாள ரடியிணைமேல்
நயங்கள்செறி கச்சிநகர் நான்மறையோர் நல்லருளாற்
பயன்களிவை யனைத்துமெனப் பண்டுரைத்தார் படியுரைத்த
வியன்கலைக ளீரைந்தும் வேதியர்கட் கினியனவே. (11)

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ தினசரி.

வரியிரு ளழிவதர் மனம்வரு முணர்வொடு
கரிகிரி மருவிய கரியவ ரடியிணை
பரிவொடு பரவுந லடியவர் பழவுரை
யரியரி யரியரி யரியரி யரியே. (1)

வினைவகை யொழுகிய வெறிநிலை யடையவும்
நினைவுடை நிகழெதிர் நிலைநல மணுகிட
மனமுறை கிரிசைகண் மகிழ்மறை நெறிகொடு
தனிமுத லடியிணை யடைபவர் தமரே. (2)

மலர்மகண் மருவிய மறுவுடை யிறையவர்
மலரடி கருதிய மனமுடை யடியவர்
மலர்புன லமுதுடன் வகையென வடையவும்
மலர்மதி யெமதல வெனவரு பவரே. (3)

நறையுடை மலர்மக ணலமுற மருவிய
விறையவ னினிதுற வினியவை யெனுமவர்
அறநெறி யிலனவ னணுகினு மணுகிலர்
துறையல தெனுமொரு துறைபடு கிலரே. (4)

ஒளிமதி யெனவொரு திருவுட னுயர்பவர்
நளிர்மதி முகநகை நலநில வுகவுகள்
தெளிபுன லமுதெனச் செழுமதி யடியவர்
குளிமுதல் கிரிசைகள் குறைகிலர் வலவே. (5)

வருவதொருறவென வளரிள வரசென
மருவுநன் மகனென வனமத கரியென
அருவிலை மணியென வடியவ ரடைபவர்
அருகணை யிறைவனை யருகணை யுடனே. (6)

விரைகமழ் மலர்மகண் மிகவுறு மிறையவன்
குரைகழல் குறுகிய குளிர்மதி மதியொடும்
வரைநிலை யடியவர் மறைகளின் மறையெனு
முரைநிரை பரவுவ ருளமமு துணவே. (7)

துதிகளு மறிவரு சுருதியி னிறுதியி
னிதயமி தெனமுனி யிறையவருரைகளும்
மதுரம னுதவிய மறைகளு மடியவர்
விதிவகை பரவுவர் மிகவுள மெழவே. (8)

அறிவிலர் தலைமிசை யயனடி யெழுதிய
பொறிவகை எழுவதொர் பொறிநல முகவலர்
உறுவது முடையது மிதுவென மருவதும்
நறுமலர் மகள்பதி நலமுறு நினைவே. (9)

பெருகிய நலநிலை பெருமையின் மிகுமயல்
உருகிய நிலைமன முயர்முகி யெழுமுடல்
சொருகிய விழிதிகழ் சுடர்மதி புகுமிறை
கருகிய வுருதிகழ் கரிகிரி யரியே. (10)

ஸ்ரீ:

# திருச்சின்னமாலை.

## சிறப்புத்தனியன்கள்.

மன்னுதிரு மந்திரத்தும் வாழ்து வயத் தும்பொருளுந்
துன்னுபுகழ்க் கீதைதனிற் சொன்னவெண்ணுன் கின்பொருளும்
அன்னவயற் கச்சியரு ளாளர்திருச் சின்னவொலி
இன்னபடி யென்றுரைத்தா னெழில்வேதாந் தாரியனே.

ஏகாந்த மூன்று மெழிலா லுரைசெய்து
மாகாந்தஞ் செய்தருளும் வள்ளலுன்—சாகாந்த
தேசிகனுந் தூப்புற் றிருவேங்க டேசகுரு
வாசகமே யெங்களுக்கு வாழ்வு.

பரிச்சின்ன மான விருநா லெழுத்தின் பல் வண்மை யெலாம்
விரிச்சு நலம்பெற வோதவல் லோர்க்கிந்த மேதினிக்கே
மரிச்சின்ன மீளப் பிறவாமல் வாழ்விக்கு மால்வரதர் [கே.
திருச்சின்ன வோசை யினிமையுண் டோமற்றைத் தேவர்கட்

ஈருலகைப் படைக்கவெண்ணி யிருந்தார் வந்தார்
எழின்மலரோன் றனையன்றே யீன்றார் வந்தார்
மாருதமண் ணீராகு மாயோர் வந்தார்
வானெடெரி தாமாகு மறையோர் வந்தார்
சூரியர்தம் முடன்றுலங்கு தூயோர் வந்தார்
சுரர்களுக்கன் றமுதருள்சுந் தரனர் வந்தார்
வாரிதிசூழ் வையகம்வாழ் வித்தார் வந்தார்
வண்மையுடன் வரந்தருவார் வந்தார் தாமே. (1)

அருமறையை யூழிதனிற் காத்தார் வந்தார்
அது தன்னை யன்றயனுக் களித்தார் வந்தார்
தருமவழி யழியாமற் காப்பார் வந்தார்
தாமரையா ளுடனிலங்குந் தந்தை வந்தார்
திருவுரையாய்த் தாம்பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளாற் செழுங்கலைக டந்தார் வந்தார்
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே. (2)

அனைத்துலகுங் காக்குமரு ளாளர் வந்தார்
அனைத்துக்கு மதிபதியாய் நிற்பார் வந்தார்
தினைத்தனையுந் திருமகளை விடாதார் வந்தார்
தேசொத்தார் மிக்காரு மில்லார் வந்தார்
நினைக்கநமக் கின்னறிவு தந்தார் வந்தார்
நிலைநின்ற வுயிர்தோன்ற நினைந்தார் வந்தார்
எனக்கிவர்நா னிவர்க்கென்ன வினியார் வந்தார்
எழுத்தொன்றிற் றிகழநின்றார் வந்தார் தாமே. (3)

நாம் வணங்கத் தாமிணங்கா நிற்பார் வந்தார்
நம்மையடைக் கலங்கொள்ளு நாதர் வந்தார்
நாமெமக்காம் வழக்கெல்லா மறுப்பார் வந்தார்
நமக்கிதுவென் றுரையாமல் வைத்தார் வந்தார்
சேமமெண்ணி யெம்மையன்பர்க் கடைத்தார் வந்தார்
செழுந்தகவாற் றிண்சரணு மீசர் வந்தார்
தாமனைத்துந் தீவினையைத் தவிர்ப்பார் வந்தார்
தமக்கேயா யெமைக் கொள்வார் வந்தார் தாமே. (4)

உலகெல்லா முள்ளேவைத் துமிழ்ந்தார் வந்தார்
உலகுடம்பாய்த் தாமுயிராய் நின்ருர் வந்தார்
அலைகடலா யாநந்த மடைந்தார் வந்தார்
அளவில்லா வருளாழிப் பெருமாள் வந்தார்
திலகமெனுந் திருமேனிச் செல்வர் வந்தார்
செழுங்குணங்க ளிருமூன்று முடையார் வந்தார்
இலகுசுடர் முழுநலமா மினியார் வந்தார்
எல்லார்க்குங் கதியானுர் வந்தார் தாமே. (5)

அருளாலே விலங்கிரண்டு மழிப்பார் வந்தார்
அஞ்சிறையைக் கழித்தருளு மன்பர் வந்தார்
மருள்வாரா வகைநம்மைக் காப்பார் வந்தார்
வானேற வழிநடத்தி வைப்பார் வந்தார்
தெருளாருந் தெளிவிசும்பு தருவார் வந்தார்
திண்கழற்கீழ் வாழ்ச்சிநமக் கருள்வார் வந்தார்
பொருளான வடிமைநமைக் கொள்வார் வந்தார்
பிரியாமற் காத்தளிப்பார் வந்தார் தாமே. (6)

அகலகில்லாத் திருமகளா ரன்பர் வந்தார்
அடியிரண்டு மாருகத் தந்தார் வந்தார்
புகலில்லார் புகலாகும் புனிதர் வந்தார்
பொன்னுலகிற் றிருவுடனே புகழ்வார் வந்தார்
அகிலமெலா மானந்த மானுர் வந்தார்
அடியிணைக்கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார்
பகனடுவே யிரவழைக்க வல்லார் வந்தார்
பகலொன்று யிரவழித்தார் வந்தார் தாமே. (7)

தருமன்விடத் தாந்தூது போனுர் வந்தார்
தரணிபொருத் திண்பாரந் தவிர்த்தார் வந்தார்
அருமறையின் பொருளனைத்தும் விரித்தார் வந்தார்
அஞ்சினநீ யென்னையடை யென்ருர் வந்தார்
தருமமெலாந் தாமாகி நிற்பார் வந்தார்
தாமேநம் வினையனைத்துந் தவிர்ப்பார் வந்தார்
பரமெனது நீபுலம்பே லென்ருர் வந்தார்
பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார் தாமே. (8)

வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் வந்தார்
மல்லர்மத கரிமாள மலைந்தார் வந்தார்
கஞ்சனைப்போர்க் கடுஞ்சினத்தாற் கடிந்தார் வந்தார்
கண்ணுதன்முன் வாணன்றேள் கழித்தார் வந்தார்
வெஞ்சொறர வீடுகொடுத் துகந்தார் வந்தார்
விலக்கில்லா வழிநடத்த விரைந்தார் வந்தார்
பஞ்சவரைப் பலவகையுங் காத்தார் வந்தார்
பாஞ்சாலி குழன்முடித்தார் வந்தார் தாமே. (9)

அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்
ஆனைபரி தேரின்மே லழகர் வந்தார்
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரந் தருந்தெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென ஓலமிட வல்லார் வந்தார்
உத்தரவே திக்குள்ளே யுதித்தார் வந்தார்
உம்பர்தொழுங் கழலுடையார் வந்தார் தாமே. (10)

மறைத்தலையி லிசையெழுத்தில் வணங்கும் வாக்கின்
மந்திரத்தி லெழுத்தாந் திருநா மத்தில்
நிறைத்திலகு வேற்றுமையி லிரண்டா மொன்றி
னெடுமாறன் கீதையெலா நிறைந்த சொல்லில்
உறைத்தவர்கண் டுரைத்தபொரு ளான வெல்லா
முயர்விரத வருளாளப் பெருமா டேசின்
திறத்திலிவை திருச்சின்ன மாலை பத்துஞ்
செவிக்கினிதாஞ் சிற்றின்ப மிசையா தார்க்கே. (11)

ஸ்ரீ:

# பன்னிருநாமம்.

## சிறப்புத்தனியன்கள்.

பன்னிரு நாமந் திருவத்தி யூர்ப்பரன் பாதமென்று
நன்னிற நாமம் படைதிக்கி யாவையு நாமறியத்
தென்னந் தமிழ்த்தொடைச் சீரார் கலித்துறை யோதித்தந்தான்
மின்னுறு நூலமர் வேங்கட நாதனந் தேசிகனே.

கார்கொண்ட மேனியன் பாதாம் புயத்தைக் கருத்திருத்தி
ஏர்கொண்ட கீர்த்தி யிராமா னுசனைச் சிரத்திற்றெழுஞ்
சீர்கொண்ட தூப்புற் றிருவேங்க டாரியன் சீர்மொழியை
ஆர்கொண்டு போற்றினு மம்மால் பதத்தை யடைவிக்குமே.

கேசவ னாய்நின்று கீழைத் திசையிலு நெற்றியிலுந்
தேசுடை யாழிக ளைன்குடன் செம்பசும் பொன்மலைபோல்
வாசி மிகுத்தெனை மங்காமற் காக்கு மறையதனு
லாசை மிகுத்த வயன்மக வேதியி லற்புதனே. (1)

நாரண னாய்நல் வலம்புரி நாலு முகந்தெடுத்துக்
காரணி மேக மெனவே யுதரமு மேற்குநின்றே
ஆரண நூல்தந் தருளா லடைக்கலங் கொண்டருளும்
வாரண வெற்பின் மழைமுகில் போனின்ற மாயவனே. (2)

மாதவ நாமமும் வான்கதை நான்கு மணிநிறமும்
ஓது முரைப்படி யேந்தி யுரத்திலு மேலுநல்கிப்
போதலர் மாதுடன் புந்தியி லன்பாற் புகுந்தளிக்குந்
தூதனு நாதனு மாயதொல் லத்தி கிரிச்சுடரே. (3)

கோவிந்த னென்னுங் குளிர்மதி யாகிக் கொடியவரை
யேவுந் தனுக்க ளுடன்றெற் கிலுமுட் கழுத்துநின்று
மேவுந் திருவரு ளால்வினை தீர்த்தெமை யாண்டருளும்
பூவன் றெழுவத்தி மாமலை மேனின்ற புண்ணியனே. (4)

விட்டு வலவயிற் றின்கண் வடக்கும் விடாதுநின்று
மட்டவிழ் தாமரைத் தாது நிறங்கொண்ட மேனியனுய்த்
தொட்ட கலப்பைக ளீரிரண் டாலுந் துயரறுக்குங்
கட்டெழிற் சோலைக் கரிகிரி மேனின்ற கற்பகமே. (5)

மதுசூ தனனென் வலப்புயந் தென்கிழக் கென்றிவற்றிற்
பதியா யிருந்துபண் மாதுறை பங்கய வண்ணனுமாய்
முதுமா வினைக ளறுக்கு முயலங்க ளீரிரண்டால்
மதுவா ரிளம்பொழில் வாரண வெற்பின் மழைமுகிலே. (6)

திரிவிக் கிரமன் றிகழ்தீ நிறத்தன் றெளிவுடைவா
ளுருவிக் கரங்களி லீரிரண் டேந்தி வலக்கழுத்துஞ்
செருவிக் கிரமத் தரக்கர்திக் குஞ்சிறந் தாடுமிறை
மருவிக் கரிகிரி மேல்வரந் தந்திடு மன்னவனே. (7)

வாமன னென்றன்வா மோதர மும்வாயு வின்றிசையுந்
தாம மடைந்து தருண வருக்க னிறத்தனுமாய்ச்
சேம மரக்கலஞ் செம்பவி யீரிரண் டாற்றிகழும்
நாமங்கை மேவிய நான்முகன் வேதியி னம்பரனே. (8)

சீரார் சிரீதர னுய்ச்சிவன் றிக்கு மிடப்புயமும்
ஏரா ரிடங்கொண் டிலங்குவெண் டாமரை மேனியனுய்ப்
பாராய பட்டய மீரிரண் டாலும் பயமறுக்கும்
ஆரா வமுதத்தி மாமலை மேனின்ற வச்சுதனே. (9)

என்னிரி டிகேச னிறைகீ ழிடக்கழுத் தென்றிவற்றில்
நன்னிலை மின்னுரு வாய்நாலு முற்கரங் கொண்டளிக்கும்
பொன்னகில் சேர்ந்தலைக் கும்புனல் வேகை வடகரையிற்
றென்ன னுகந்து தொழுந்தேன வேதியர் தெய்வமொன்றே. (10)

எம்பற்ப நாபனு மென்பின் மனம்பற்றி மன்னிநின்றே
வெம்பொற் கதிரவ னுயிர மேவிய மெய்யுருவாய்
அம்பொற் கரங்களி லைம்படை கொண்டஞ்ச லென்றளிக்குஞ்
செம்பொற் றிருமதிள் சூழ்சிந்து ராசலச் சேவகனே. (11)

தாமோ தரனென்றன் ருமங்க ளுலு கரங்களிற்கொண்
டாமோ தரமென வாகத்தி னுட்புறம் பிற்கழுத்துந்
தாமோ ரிளங்கதி ரோனென வென்னு ளிருளறுக்கும்
மாமோக மாற்று மதிளத்தி யூரின் மரகதமே. (12)

கத்தித் திரியுங் கலைகளை வெல்லுங் கருத்தில் வைத்துப்
பத்திக் குறுதுணை பன்னிரு நாமம் பயில்பவர்க்கு
முத்திக்கு மூல மெனவே மொழிந்தவிம் மூன்றுநான்குந்
தித்திக்கு மெங்க டிருவத்தி யூரரைச் சேர்பவர்க்கே. (13)

ஸ்ரீ:

# கலம்பகம்.

ஒன்றே புகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளா
லன்றே யடைக்கலங் கொண்டநம் மத்தி கிரித்திருமா
லின்றே யிசையி லிணையடி சேர்ப்ப ரினிப்பிறவோம்
நன்றே வருவதெல் லாநமக் குப்பர மொன்றிலதே. (1)

சிறுபயனிற் படியாத தகவோ ரெம்மைச்
சேர்க்கவடைக் கலங்கொண்ட திருமா ருனே
மறுபிறவி யறுத்தழியா வானில் வைக்கு
மனமேநீ மகிழாதே யிருப்ப தென்கொல்
உறுவதுனக் குரைக்கேனிங் கிருந்த கால
மொருபிழையும் புகுதாத வுணர்த்தி வேண்டிப்
பெறுவதெலா மிங்கேநாம் பெற்று வாழப்
பேரடிமை யார்க்கென் றிதிகழே னீயே. (2)

மன்னவர் விண்ணவர் வானே ரிறையொன்றும் வான்கருத்தோ
ரன்னவர் வேள்வி யனைத்து முடித்தன ரன்புடையார்க்
கென்ன வரந்தர வென்றுநம் மத்தி கிரித்திருமால்
முன்னம் வருந்தி யடைக்கலங் கொண்டநம் முக்கியரே. (3)

(1) தேசிகமாலை. அமிருதரஞ்சனி. (18)
(2) தேசிகமாலை. அமிருதரஞ்சனி. (19)
(3) தேசிகமாலை. அதிகாரசங்கிரகம். (20)

புருடன்மணி வரமாகப் பொன்ரு மூலப்
பிரகிருதி மறுவாக மான்றண் டாகத்
தெருண்மருண்வாண் மறைவாக வாங்கா ரங்கள்
சார்ங்கஞ்சங் காகமனந் திகிரி யாக
இருடிகங்க ளீரைந்துஞ் சரங்க ளாக
விருபூத மாலைவன மாலை யாகக்
கருடனுரு வாமறையின் பொருளாங் கண்ணன்
கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின் ருனே. (4)

உத்தமவ மர்த்தலம மைத்ததொ
ரெழிற்றனுவி னுய்த்த கணையா
லத்திரவ ரக்கன்முடி பத்துமொரு
கொத்தென வுதிர்த்த திறலோன்
மத்துறு மிகுத்ததயிர் மொய்த்தவெணெய்
வைத்ததுணு மத்த னிடமா
மத்திகிரி பத்தர்வினை தொத்தற
வறுக்குமணி யத்தி கிரியே. (5)

காசினியின் வரையனைத்துங் காயா வண்ணன்
கடைந்தெடுத்த கௌத்துவத்தின் சீர்மைக் கொவ்வா
காசிமுத லாகியநன் னகரி யெல்லாங்
கார்மேனி யருளாளர் கச்சிக் கொவ்வா
மாசின்மனந் தெளிமுனிவர் வகுத்த வெல்லா
மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா
வாசியறிந் திவையுரைத்தோம் வையத் துள்ளீர்
வைப்பாக விவைகொண்டு மகிழ்மி னீரே. (6)

கழியாத கருவினையிற் படிந்த நம்மைக்
காலமிது வென்றெருகாற் காவல் செய்து
பழியாத நல்வினையிற் படிந்தார் தாளிற்
பணிவித்துப் பாசங்க ளடைய நீக்கிச்

---

(4) தேசிகமாலை. அதிகாரசங்கிரகம். (41)
(5) தேசிகமாலை. அதிகாரசங்கிரகம். (44)
(6) தேசிகமாலை. அமிருதாசுவாதினி. (27)

சூழியாத செவ்வழியிற் றுணைவ ரோடே
தொலையாத பேரின்பந் தலைமே லேற்றி
அழியாத வருளாழிப் பெருமான் செய்யு
மந்தமிலா வுதவியெலா மளப்பா ராரே. (7)

கங்கிருளால் விடியாத வுலகுக் கெல்லாங்
கைவிளக்கா மிவையென்று கண்ணன் காட்டும்
பொங்குபுக ழாகமங்கள் தெரியச் சொன்ன
பொருளிவைநாம் புண்ணியர்பாற் கேட்டுச் சொன்னோம்
மங்குடலும் பொருளுமல தறியா மாந்தர்
வலையுளகப் பட்டுவரம் பழியா தென்றும்
பங்கயமா துற்றவரு ளாளர் தம்பாற்
பத்திமிகு பவித்திரங்கள் பயின்மி னீரே. (8)

வண்மை யுகந்த வருளால் வரந்தரு மாதவனு
ருண்மை யுணர்ந்தவ ரோதுவிக் கின்ற வுரைவழியே
சின்மை தருந்தெளி வொன்றுற் றிணியிரு ணீங்கியநாம்
தண்மை கழிந்தனந் தத்துவங் காணுந் தரத்தனமே. (9)

(7) தேசிகமாலை. அமிருதாசுவாதினி. (30)
(8) தேசிகமாலை. ஆஹாரநியமம். (21)
(9) தேசிகமாலை. அமிர்தரஞ்ஜனி. (16)

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 21. | திருமாமகள் மாலை. | திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள். |
| 22. | திருநரசிங்கர் மாலை. | ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள். |
| 23. | அழகியசிங்கர் மாலை. | ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 24. | பொய்கையார் மாலை. | ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள். |
| 25. | ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை. | சிறந்த தேசிக பக்தர். |
| 26. | வாரணமாயிரமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள். |
| 27. | ஸ்ரீ பார்த்தசாரதி யம்மான் பாமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்தராஜய்யங்கார் அவர்கள். |
| 28. | தமிழுரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள். | சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர். |
| 29. | திருச்சின்னமாலை. | ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள். |
| 30. | திருவேங்கடவர்மாலை. | நான்மறையாளர்கள். |
| 31. | மார்கழி மாலை. | ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்கள். |
| 32. | மதுரகவி மாலை. | ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள். |
| 33. | திருவருட்சதக மாலை. | ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |
| 34. | சீரொன்று தூப்புற்றனியன் மாலை. | அருள் வரதரடியார். |
| 35. | மும்மறைத் தெளிவுப்பொருண் மூதுரை மாலை. | ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயண ஸ்வாமி ரெட்டியார் அவர்கள். |
| 36. | அருளாளர் மாலை. | ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |

பெறும் இடம்: **ஆநந்த பிருந்தாவநம்,**
**ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.**

† இவ்வடையாள மிடப்பெற்றவை இப்போது கைவசமில்லை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.